# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 114 சுபகிருது வருடம், கார்த்திகை மாதம் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (29.11.2022) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் அவ்வல் - 04, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60


கமெண்ட் கந்தர்...






## உஷ்

அமைச்சரவை மறுசீரமைப்பு குறித்து பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட பிரமுகர் ஒருவர் ரணிலின் அபிப்பிராயத்தை அறியமுற்பட்டு செமையாக வாங்கிக்கட்டிக்கொண்டாராம்.

"அமைச்சரவை மாற்றத்தை எப்போது செய்வது எப்படிச் செய்வது என்பது எனக்குத் தெரியும். அதனை நான் செய்வேன். அது பட்ஜெட்டுக்கு பின்னரோ அல்லது அடுத்த வருடமோ கூட இருக்கலாம். அதற்கு அழுத்தங்களை கொடுக்க முயலாதீர்கள்" என்று டோஸ் கொடுத்தாராம் ரணில்.

இதேவேளை, அமைச்சரவை மறுசீரமைப்பு தொடர்பில் ஜனாதிபதியுடன் நேரடியாக பேசி அழுத்தங்களை வழங்க முயலவேண்டாமென மஹிந்த ராஜபக்ஷவும் கட்சியினரைப் பணித்துள்ளதாக தகவல்.

# வடக்கு மாகாண தேர்தல் விரைவில்!

## அரச மேல்மட்டத்தில் அவசர ஆலோசனை

(நமது விசேட செய்தியாளர்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு அரச மேல்மட்டத்தில் அவசர ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை அடுத்த வருட பிற்பகுதியில் நடத்தத் தீர்மானித்திருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்கு முன்னர் படிப்படியாக மாகாண தேர்தலை நடத்தவுள்ளாரென்றும் அதன்படி முதற்கட்டமாக வடக்கு மாகாண தேர்தலை நடத்த அவர் அபிப்பிராயம் கொண்டிருப்பதாகவும் அறியமுடிகின்றது.

வடக்கு மாகாண தேர்தலை நடத்துமாறு இந்தியா உட்பட்ட வேறு தரப்புகளிடம் இருந்துவரும் அழுத்தம், 13ஆவது திருத்த அமுலாக்க கோரிக்கை என்பவற்றை கருத்திற்கொண்டு இவ்வாறு வடக்கு மாகாணத் தேர்தலை நடத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

# மாணவர்களிடையே வேகமாக பரவும் ஐஸ் போதைப்பொருள்

## மனநோய்க்கான வாய்ப்புகள் அதிகமென வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை

(கே.சுபானி)

பாடசாலை மாணவர்களிடையே 'ஐஸ்' போதைப்பொருள் பாவனை புதிய வேகத்தில் அதிகரிப்பதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் மூத்த அதிகாரியொருவர் தெரிவிக்கையில்,

பெற்றோர் தமது குழந்தைகளின் செயற்பாடுகளின்மீது மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும். ஐஸ், ஹெரோயின் மற்றும் புகையிலை உள்ளிட்டவற்றின்பாவனை பாடசாலை மாணவர்களிடையே அதிகரித்துள்ளது.

இதில் உளநல பாதிப்புக்காக பயன்படுத்தும் மாத்திரையை உட்கொள்வது ஒரு புதிய போக்காக மாறியுள்ளது...

02 பக்கம்

# விவசாயிகளுக்கு இன்றுமுதல் மண்ணெண்ணெய் விநியோகம்

மீனவர்களின் மண்ணெண்ணெய்ப் பிரச்சினைக்குத் தீர்வுகண்ட அதே பொறிமுறையைப் பயன்படுத்தி எதிர்வரும் 03 நாட்களுக்குள் இலங்கையின் அனைத்து விவசாயப் பகுதிகளுக்கும் மண்ணெண்ணெய் விநியோகம் இன்றுமுதல் ஆரம்பிக்கப்படுமென சமூக அலுவல்களுக்கான ஜனாதிபதியின் பணிப்பாளர் நாயகம் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார்.

2022 நவம்பர் முதலாம் திகதிமுதல் 19ஆம் திகதிவரை, நாளொன்றுக்கு 29 மண்ணெண்ணெய்...

02 பக்கம்



# இந்திய - மேற்குலக பொறிக்குள் இலங்கை

## விமல் எம்.பி. குற்றச்சாட்டு

08 பக்கம்

# வியட்நாமிலிருந்து 85 பேர் நாட்டுக்குத் திரும்ப விருப்பம்

## அமைச்சர் சப்ரி சபையில் அறிவிப்பு

(கே.சுபானி)



அகதிகள் அந்தஸ்து கோரி வியட்நாமில் தஞ்சமடைந்துள்ள 303 இலங்கையர்களில் 85 பேர் மீண்டும் நாட்டுக்குத் திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

2023ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் சபையில் இடம்பெற்றபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் சப்ரி இவ்வாறு தெரிவித்தார்.

சட்டவிரோதமாக...

02 பக்கம்

# தமிழர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு முழு ஒத்துழைப்பு

## வைரமுத்துவின் 'பட்டுவேட்டி' குறுங்கவிதையை மேற்கோளிட்டு கூட்டமைப்பை சபையில் விமர்சித்தார் சந்திரகாந்தன் எம்.பி.



(கே.சுபானி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் ஊடாக வடக்கு, கிழக்கில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை நிவர்த்தி செய்யக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைக்குமாயின் அதனை வரவேற்க வேண்டும். அதற்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி எப்போதும் ஒத்துழைப்பு வழங்குமென அந்தக் கட்சியின் தலைவரும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட அவிருத்திக்குழு...

02 பக்கம்

# அலி சப்ரி அமெரிக்கா பயணம்

அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் என்டனி பிளிங்கெனின் அழைப்பின்பேரில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி இன்று அந்நாட்டுக்குப் பயணமாகவுள்ளார். இன்றுமுதல் டிசம்பர் மாதம் நான்காம் திகதிவரை அவர் பல் வேறுமட்ட...

02 பக்கம்

# கசினோ அனுமதிக்கு நிதிக்குழு மறுப்பு

## சபையில் அறிவித்தார் ஹர்ஷ எம்.பி.

(ம.சுசிகலா)

நாட்டில் முதல் தடவையாக கசினோவுக்கு அனுமதிப்பத்திரம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அரச நிதிக் குழுவின் தலைவருமான ஹர்ஷ டி சில்வா, கசினோ ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை இல்லாமல் அரச நிதிக் குழுவினால் அதற்கு...

02 பக்கம்

# யாழ். - சென்னை விமான சேவை விரைவில்

(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)

சென்னைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புதிய விமான சேவைகளை தொடங்கும் திட்டமும், பயணிகளிடமிருந்து கிடைக்கும் வரவேற்பின் அடிப்படையில் சென்னை, மதுரை,...

02 பக்கம்

# உயர்தரப் பரீட்சைக்கு 80% வருகை அவசியம்

பாடசாலைக்கு 80 வீத வருகை வீதத்துடன் கூடிய மாணவர்களே 2022 க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவார்கள் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

உயர்தரத்தில் பயிலும் மாணவர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்கும் வீதம் குறைவடைந்து வருவதாக பல்வேறு தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து, கல்வி அமைச்சு இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

அதனடிப்படையில், எதிர்வரும் பரீட்சைக்கு தோற்றும்போது 80 வீத வருகை பாடசாலையின் அதிபரால் உறுதிப்படுத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# டயனாவுக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு

## டிச.12இல் ஆவணங்களை சமர்ப்பிக்கவும் நீதிமன்றம் பணிப்பு

(ம.சுசிகலா)

சுற்றுலா இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவின் குடியுரிமையை சவாலுக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனுவை எதிர்வரும் டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தீர்மானித்தது.

இந்த மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட நீதிமன்றம், இராஜாங்க அமைச்சரின் குடியுரிமை தொடர்பான ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள கட்டுப்பாட்டாளருக்கு உத்தரவிட்டது.

டயனா கமகே,...

02 பக்கம்

# தேர்தல் நடத்த இயலாதென்றால் ஆணைக்குழுவொன்று எதற்கு?

## பயனில்லை என்கிறார் நிமல் புஞ்சிஹேவா

(ஏ.பிர்தௌஸ்)

தேர்தல் ஒன்றை நடத்த இயலாது என்றால் தேர்தல் ஆணைக்குழுவொன்று இருப்பதில் எந்தப் பிரயோசனமும் இல்லையென தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

நாடாளுமன்ற...

02 பக்கம்

# பிரதமரின் புதல்வருக்கு சுகமான ரயில் பயணம்

தனக்குக் கிடைக்கும் நேரத்தைப் பொறுத்து ரயில்களிலேயே பயணம் மேற்கொள்வதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் புதல்வருமான யதாமினி குணவர்தன நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

மருதானையிலிருந்து வக, கஹஹேனவுக்கு ரயிலில் செல்வதாகவும் அதற்கென 120 ரூபா அறவிடப்படுவதாகவும் ...

02 பக்கம்




# சீனாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் எதனையும் மேற்கொள்ள வேண்டாம்

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அரசாங்கத்திடம் கோரிக்கை

(யாழ். செய்தியாளர்)

மக்களின் விருப்பத்திற்கு மாறாக சீனாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வேண்டாமென இலங்கை அரசுக்கு யாழ்ப் பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கை யிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

யாழ். பல்கலைக்கழக மாணவர்களாகிய நாங்கள், சீன அரசாங்கத்தினால் சீன விவசாயப் பல்கலைக்கழகத்திற்கும் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம், இலங்கை அரசாங் கத்தின் மறைமுக ஆதரவுடன் நவம்பர் 25இல் கையொப்பமிட இரகசிய ஏற்பாடு செய்யப்பட்டது என்பதை ஊடகங்களில் அறிந்து அதிர்ச்சியடைந்தோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில் எங்களின் நிலத்தை அபகரிக்கும் சீனாவின் மறைமுக நிகழ்ச்சி நிரலை அறிந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு துணிச்சலாக மறுத்த யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜாவுக்கு நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறோம்.

சீனா, அனைத்தையும் நன்றாக அறிந்திருந்தும் தமிழர்களை தொடர்ந்து அவமானப்படுத்துவதையும், சர்வதேச அரங்கில் தமிழர்களுக்கு நீதி கிடைக்காமல் தடுப்பதையும் வழக்கமாக கொண்டதுடன், போர்க்குற்றவாளிகளை ஆதரித்தும் இலங்கையை கடன் பொறியில் சிக்க வைத்து அச்சுறுத்தியும் இலங்கையை கைப்பற்றும் அதன் மறைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்து வருகிறது.

தமிழர் விரோத மனப்பான்மை கொண்ட சீனா வடக்கிலும் கிழக்கிலும் தனது செல்வாக்கை அதிகரிக்கச் செல்லும் தீய நோக்கத்துடன் எமது கடற்பரப்பையும் நிலத்தையும் அபகரித்து எமது பாரம்பரிய மண்ணில் எம்மை அகதிகளாக்கி இனப்படுகொலை செய்யும் முயற்சிகளை நாம் ஏற்கனவே கண்டித்திருந்தோம்.

சீனாவின் அணுகுமுறையின் அடிப்படையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள வளமான விவசாய நிலங்களையும் கடற்பரப்பையும் சீனாவுக்கு விற்பதற்கு இலங்கை அரசாங்கம் ஏற்கனவே சீனாவுடன் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டதாக நாங்கள் சந்தேகிக்கிறோம். எமது நிலங்களையும் கடற்பரப்பையும் மக்களின் விருப்பத்திற்கு மாறாக சீனாவிற்கு விற்க பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களை அரசாங்கம் செய்து வருகிறது.

அரசியல் நிர்ப்பந்தத்திற்காக எமது நிலத்தையும் கடற்பரப்பையும் வேறு நாடுகளுக்கு விற்க வேண்டாம் என இலங்கை அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுப்பதுடன், நமது கடற்பரப்பையும், நிலத்தையும் காப்பாற்ற குரல் கொடுக்குமாறு சிவில் சமூகங்கள் மற்றும் அனைத்து மக்களிடமும் வேண்டுகோள் விடுக்கின்றோம். இந்த கடமையிலிருந்து தவறுகின்ற பட்சத்தில், எதிர்காலத்தில் நாம் அனைவரும் எம்முடைய சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்படுவோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வியட்நாமில் தற்கொலை செய்துகொண்டவரின் சடலத்தைக் கொண்டுவர நடவடிக்கை அவசியம்

## சிறீதரன் எம்.பி. சபையில் வலியுறுத்து

(கே.சுபானி)

வியட்நாமுக்கு அகதிகளாகச் சென்றோரில் தற்கொலை செய்துகொண்ட குடும்பஸ்த ரின் சடலத்தை நாட்டுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சபையில் நேற்று (28) கோரிக்கை விடுத்தார்.

2023 ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், வியட்நாமில் உயிரிழந்த அகதியின் சடலத்தை நாட்டுக்குக் கொண்டுவருவதற்கான வழிமுறைகள் என்னவென கேள்வி எழுப்பினார்.

"வியட்நாமுக்கு சென்றவர்களில் முக்கியமாக 37 வயதுடைய 4 பிள்ளைகளின் தந்தை சுந்தரலிங்கம் கிரிதரன் தன்னைத்தானே மாய்த்துக்கொண்டு உயிரிழந்துள்ளார். அவருடைய உடல் வியட்நாமிலுள்ளது. அவரது உடலை நாட்டுக்கு கொண்டுவருவதற்கு 30 இலட்சம் ரூபா செலவாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவருடைய மனைவி வேணுகா கிரிதரன் தனது குழந்தைகள் நால்வரும் கடைசியாக தமது தந்தையின் முகத்தை கடைசியாக பார்க்க



விரும்புகின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

அவரின் உடலை நாட்டுக்கு கொண்டுவரு வதற்கு நாங்கள் என்ன செய்யவேண்டும்" என சிறீதரன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

அதற்கு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பதிலளிக்கையில்,

உடலை இலங்கைக்குக் கொண்டு வரவேண்டுமாயின் 3 மில்லியன் ரூபா பணமாக செலுத்த வேண்யுள்ளது. தற்போது எங்களுக்கு அவ்வளவு பெரிய தொகையை செலுத்த முடியாதுள்ளது. இதற்காக அவர்களின் குடும்பத்தினருடன் பேச்சுவார்த்தை மேற்கொண் டுள்ளோம். இல்லையென்றால் அவரது உடலை வியட்நாமிலேயே நல்லடக்கம் செய்யலாம். அவரின் குடும்பத்திலிருந்து பதில் கிடைக்கும் வரை எதிர்பார்த்து கொண்டிருக்கிறோம்.

அகதிகள் குறித்து வியட்நாமிலுள்ள இலங்கைக்கான தூதுவருடன் கலந்துரையாடி னேன். தற்போது வியட்நாமில் 303 பேர் இருக்கின்றனர்.

வியட்நாமிலுள்ளோருடன் நாம் கலந்துரையாடிக்கொண்டிருக்கிறோம். அவர்களில் 85 பேர் நாட்டுக்கு வருவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். ஐக்கிய நாடுகளின் அகதிகள் முகவரம் அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம்.

இன்றும் இரண்டு நாட்களில் அவர்களை நாட்டுக்கு அழைத்துவருவதற்கான நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளோம். அவர்கள் நாட்டுக்கு வர விரும்பவில்லை என்றால் அவர்களுக்கான நெருக்கடிகள் அதிகரிக்கும். அவர்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை நேர்முகம் செய்துகொண்டிருக்கிறது என்றார்.

### விவசாயிகளுக்கு...

பவுசர்கள் வீதம் விநியோகிக்கப்பட்டு வந்தன. எனினும், புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டத்தின் பிரகாரம் நவம்பர் 23 ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்காக 229 பவுசர்கள் (தினசரி சராசரி 45.8) விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் இது 17 சதவீத அதிகரிப்பாகுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நெல், தேயிலை, தென்னை, கறுவா, உருளைக்கிழங்கு, மரக்கறிகள், பழங்கள், தானியங்கள், மலர்கள் மற்றும் அலங்கார செடிகள், கால்நடைத் தீவனம் மற்றும் புல் வளர்ப்பாளர்களின் தேவைகளையும் கருத்திற்கொண்டு விவசாயத் தேவைகளுக்காக மண்ணெண்ணெய், டீசல் மற்றும் பெற்றோல் விநியோகிப்பதற்கான முழுமையான பொறிமுறை ஒன்றை மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் தயாரிக்குமாறு ஜனாதிபதியின் பணிப்பாளர் நாயகம் கீர்த்தி தென்னகோன் உரிய அதிகாரிகளுக்கு கடந்த வாரம் பணிப்புரை விடுத்தார்.

பிரதேச செயலகத்தின் கள உத்தியோகத்தர் களால் உறுதிப்படுத்தப்பட்ட தரவுகளை கருத்திற் கொண்டு, விவசாயிகள், விவசாய உற்பத்தி வியாபாரிகள், சிறிய - நடுத்தர விவசாயிகள் மற்றும் விவசாயத் துடன் தொடர்புடைய அனைத்து விநியோகிப் பாளர்களென எவரையும் கைவிடாமல், சிக்கனமான முறையில் எரிபொருளை விநியோகிப்பதே அரசாங்கத்தின் கொள்கை யாகும் என்று தென்னகோன் தெரிவித்தார்.

மாகாண விவசாயம், கூட்டுறவு அமைச்சு கள், கால்நடை உற்பத்தி, பெற்றோலியக் கூட்டுத்தாபன விநியோக முகாமையாளர் களுடன் இணைந்து, அங்கீகரிக்கப் பட்ட எல்லைகளுக்குள் டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் ஆகியவற்றை விநியோகிப்பதற்காக தயார் செய்யப்படும் கூட்டுத் திட்டம் நவம்பர் 28ஆம் திகதிக்குள் தயார் செய்து முடிக்கப்படும். இத்திட்டத்தில் விவசாயம், தோட்ட அமைச்சுகள், விவசாய சேவைகள் மற்றும் ஏனைய திணைக்களங்கள் ஆகியன இணைந்து செயற்படுமென்றும் அவர் கூறினார்.

இத்திட்டத்தில் ஒவ்வொரு பிரதேசத்திலும் பெரும்போகத்தின்போது வெவ்வேறு கட்டங்களில் தேவைப்படும் எரிபொருள் (டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய்) தேவை தனித்தனியாக கருத்திற் கொள்ளப்படுவது இதுவே முதற்தடவையாகும்.

அத்துடன் ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் கடந்த 5 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட விற்பனைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட எரிபொருள் தேவை பற்றிய ஆய்வும் தேசிய மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மாகாணங்கள் மற்றும் மாவட்டங் களுக்கிடையிலான பரிமாற்றப் பண்டமாக எரிபொருள் இருப்பதனால் விவசாயம், ஏற்றுமதி விவசாயம், தோட்டப் பயிர்கள், பூக்கள் மற்றும் அலங்காரப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து விவசாயத் துறைகளையும் உள்ளடக்கும் வகையில் இத்திட்டம் செயல் படுத்தப்படும்.

கடந்த போகத்தின்போது இடம்பெற்ற பிரச்சினைகளைத் தவிர்க்கும் நோக்கத்திலேயே இம்முறை பயிர் அறுவடை இயந்திரங்களுக்கும் மண்ணெண்ணெய் மூலம் இயங்கும் நீர் பம்புகளுக்கும் எரிபொருளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கள ஆய்வுகளின்றி, தேவைகள் குறித்து (தவறான) பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டதால் போதிய எரிபொருள் கையிருப்பு இருந்தும் மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டுள் ளதாக சுட்டிக்காட்டிய தென்னகோன், விவசாயத்துறையில் இதுபோன்ற முறைகேடு களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

விவசாயப் பயிர்ச்செய்கைக்காக மண்ணெண்ணெய் விநியோகிப்பதற்கு அரசாங்கம் ஏறக்குறைய 30 இலட்சம் டொலர் செலவை ஏற்க வேண்டியிருப்பதால், உயர் உற்பத்தி திறனை உறுதிசெய்யும் தேசியப் பொறுப்பு மாகாண தலைமைச் செயலாளர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்களுடையது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, விவசாய நடவடிக்கை களுக்காக கூட்டுறவு எரிபொருள் நிலையங்களுக்கு தேவையான மண்ணெண் ணெயைக் கொள்வனவு செய்வதற்கு அவசிய மான கடன் வசதிகளை கிராமிய வங்கி களுடன் இணைந்து தயார்படுத்துமாறும் மாகாண சபை கூட்டுறவு ஆணையாளர்களுக்கு ஜனாதிபதி அலுவலகம் பணிப்புரை விடுத்துள் ளது.

### கசினோ அனுமதிக்கு...

அனுமதி வழங்க முடியாதென தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (28) அரச நிதி குழுவின் செயலாற்றுகை அறிக்கையை சபைக்கு சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,

அரச நிதிக்குழுவுக்கு வழங்கப்பட்டிருந்த கசினோ வியாபாரத்தை ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் மற்றும் கசினோ வியாபாரத்தை ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்தின் விதிமுறை களுக்கு அரச நிதிக்குழுவினால் அனுமதி வழங்கப்படவில்லை.

இலங்கையில் முதல் தடவையாக கசினோவுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கவே இந்தச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உலகில் கசினோ அனுமதிப்பத்திரம் வழங்கும் போது அதற்கு கசினோ ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை ஒன்று இருக்கின்றது. ஒழுங்குபடுத் தல் அதிகார சபையின் கீழே கசினோ நிறுவனங் கள் கண்காணிக்கப்படுகின்றன. ஆனாலும் இலங்கையில் அவ்வாறானதொரு ஒழுங்கு படுத்தல் அதிகாரசபை இல்லை. அதன் காரணமாக கசினோவுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை மற்றும் கசினோ தொடர்பான அனைத்து அதிகாரங்களும் அமைச்சருக்குக் கீழே வருகின்றது.

அரசாங்கத்துக்கு கசினோவை விரைவாக அனுமதித்துக்கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது என்பது எமக்கு தெரியும். அதனால்தான் விரைவாக இந்த சட்டமூலத்தை அரசு சமர்ப்பித்திருக்கின்றது.

அதனால் கசினோ தொடர்பான கண்காணிக் கும் அதிகாரசபையை எப்போது என்ற கால எல்லையை எங் களுக்கு வழங்குமாறு நாங்கள் நிதி அமைச்சுக்கு அறிவித்திருக்கின்றோம். ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை ஒன்று இல்லாமல் கசினோவுக்கு அனுமதி வழங்குவது கடினமான விடயமாகும் என்றார்.

### வியட்நாமிலிருந்து...

வெளிநாட்டுக்கு சென்றவர்கள் பல வருடங்களாக இந்தியா உட்பட பல நாடுகளில் இருக்கின்றனர். அவ்வாறானவர்களை நாட்டுக்குத் திருப்பியழைத்து, அவர்களை எவ்வாறு கையாள வேண்டும் என்பதை கருத்திற்கொள்ளவேண்டும் அவர்கள் மீது கரிசனை கொள்ளவேண்டும் என செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை முன்வைத்தார்.

இதற்கு அமைச்சர் அலி சப்ரி பதிலளிக்கை யில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், அகதிகள் அந்தஸ்து கோரி சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் செல்வோரின் எண்ணிக்கை அதிகரித் துள்ளது. அவ்வாறு செல்வோர் போலிக் கடவுச் சீட்டுகளைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்கு சென்று பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத் துள்ளனர்.

சட்டவிரோத படகுகள் மூலம் சென்று நூற்றுக்கணக்கானோர் தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர். இந்த வருடத்தில் மார்ச் மாதம் முதல் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான தமிழ் பேசுவோர் தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதேபோல் தற்போது யுத்தம் இடம்பெற் றுவரும் உக்ரைனில் 7 தமிழர்கள் சிக்கிக் கொண்டுள்ளனர். இதேபோன்று அண்மை யில், வடக்கு - கிழக்கைச் சேர்ந்த தமிழ் பேசும் சகோதர - சகோதரிகள் 303பேர் சட்டவிரோதமாக சென்று வியட்நாமில் தஞ்சமடைந்துள்ளனர்.

அவர்களில் 85 பேர் தற்போது நாட்டுக்கு திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

போலிக் கடவுச்சீட்டுகளில் பயணிக்க வேண்டாம். அவ்வாறு சென்றால் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்கவேண்டிவரும்.

அவ்வாறு அவர்கள் செல்லவேண்டுமாயின் குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்தில பதிவுசெய்து, கடவுச்சீட்டுகளைப் பெற்று வெளிநாடுகளுக்கு செல்ல அனுமதிக்க வேண்டும். இதனை அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்றார்.

### டயனாவுக்கு...

நாடாளுமன்ற உறுப்பினராக செயற்படு வதற்கு தகுதியற்றவர் என தீர்ப்பளிக்குமாறு கோரி சிவில் செயற்பாட்டளரான ஓசந்த லக்மாலினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கனேபொல ஆகியோர் அடங்கிய குழு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

### பிரதமரின்...

அவர் குறிப்பிட்டார்.

வரவு - செலவுத்திட்டத்தின் மீதான குழு நிலை விவாதத்தில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தொடர்பில் உரையாற்றும்போது அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

நாட்டில் 165 ஆண்டுகள் பழைமையான புகையிரதத் திணைக்களம் புதிய பாதையில் பயணிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### அலி சப்ரி...

கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்தது.

இந்த விஜயத்தின்போது வெளியுறவுச் செயலாளர் என்டனி பிளிங்கென், காங்கிரஸ் உறுப்பினர்கள் மற்றும் அந்நாட்டு அரசாங்கத்தின் சிரேஷ்ட பிரதிநிதிகளையும் அலி சப்ரி சந்திக்கவுள்ளார்.

இந்த சந்திப்புகளின்போது இலங்கையின் கடன் மறுசீரமைப்பு குறித்து பேசப்படவுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

### தமிழர்களின் பிரச்சினையை...

தலைவருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் நாடாளுமன்றத்தில் நேற்று (28) தெரிவித்தார்.

2023ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு சபையில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வரவு-செலவுத் திட்டம் நிறைவடைந்தவுடன் கூட் டமைப்புடனான ஒன்றிணைந்த பேச்சுவார்த்தை குறித்து ஒரு கூட்டத்தை நடத்துவதாக தெரிவித்துள்ளார்.

அந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏனைய சிறுபான்மை கட்சிகள் மற்றும் கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித் துவப்படுத்தும் கட்சிகள் இணைந்து மிக நீண்ட காலப் பிரச்சினையாகவும், இலட்சக்கணக்கான உயிர்களை பலிகொண்டதும், பல கோடி ரூபா சொத் திழப்புகளை ஏற்படுத்திய யுத்தத்தின் பின்னர் வடக்கு - கிழக்கில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை நிவர்த்தி செய்யக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைக்குமாயின் அதனை வரவேற்கவேண்டும். அதற்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி எப்பொழுதும் ஒத்துழைப்பு வழங்கும்.

தமிழர்களிடையே ஒற்றுமையில்லை என்ற பாரிய பிரச்சினை கடந்த காலத்தில் இருந்து வந்தது. இதிலும் குறிப்பாக தமிழரசு கட்சி அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்து பேசுவதாக அழைப்பு சொல்லப்பட்டது. அது என்ன நடந்தது என்று வெளிப்படுத்தவில்லை.

முடிந்தால் நாம் நீண்ட அழிவுகளை பற்றி விமர்சனங்களை முன்வைத்து வருகிறோம். தமிழர்களுக்குள் என்ன தீர்வு அல்லது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியதைபோன்று 13 ப்ளஸிலிருந்துதான் ஆரம்பிக்கப் போகிறோமா? அதில் எம்மிடம் சரியான ஒற்றுமை வந்துள்ளதா அல்லது கவிப்பேரரசு வைரமுத்து கூறியதைப் போன்று "பட்டுவேட்டி கனவிலே இருக்கின்றபொழுது கட்டியிருந்த கோவணமும் களவாடப்பட்ட கதை"யாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நல்லாட்சி காலத்தில் அதிகாரப் பகிர்வு குறித்து கேட்டுக் கொண்டிருந்தபோதுதான் அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிற 13ஆவது திருத்தச் சட்டம் மாகாணசபை முறைமைகள் கைநழுவி இன்றுவரையும் மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படாமல் இருக்கின்றன - என்றார்.

### மாணவர்களிடையே...

பெரும்பாலானோருக்கு ஐஸ் பயன்பாடானது நீண்ட நேரம் விழித்திருக்கும் வகையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

ஐஸ் போதைப்பொருள் பயன்பாட்டால் மூளை மற்றும் உடற்சோர்விலிருந்து விடுபடுவதற்கு அவர்களுக்கு மேலும் மூன்று நாட்கள் தேவைப்படுகின்றன.

இந்த ஆபத்தான மற்றும் தீங்கு விளைவிக்கும் பொருட்களின் பயன்பாடு ஏற்கனவே உள்ள பிரச்சினைகளை அதிகப்படுத்துவது மட்டுமல்லாமல் புதியவற்றை உருவாக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஐஸ் போதைப்பொருள் பயன்பாட்டால் மனநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவுள்ளதாக ஆராய்ச்சி யில் தெரியவந்துள்ளது என மனநோய் சிறப்பு மருத்துவர் டொக்டர் ரூமி ரூபன் தெரிவித் துள்ளார்.

இதுகுறித்து வைத்தியர் ரூமி ரூபன் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய சமூகத்தில் மனநோய்க்கும், 'ஐஸ்' போதைப்பொருள் பாவனையாளர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. கேட்டால் ஐஸ் எடுத்தவர் என்கிறார்கள். இறுதியில் இவர்களுக்கு ஐஸ் போதைப்பொருளால் பல்வேறு மனநோய்களுக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. பாடசாலை மாணவர்களை குறிப்பாக இளம் தலைமுறையினரை இந்த ஐஸ் போதைப்பொருள் அழிக்கும் வகையில் காணப்படுகின்றது.

இலங்கையில் இன்று ஐஸ் போதைப்பொருள் ஒரு பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது. பாடசாலை மாணவர்கள் தற்போது பரந்தள வில் போதைப்பொருளை பயன்படுத்த ஆரம் பித்துள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் மீது பெற்றோ ரின் கவனக்குறைவு, சிறுவர்களை போதைப் பொருள்பாவனைக்கு தூண்டுவதற்கு உதவியுள் ளதாக அவர் தெரிவித்தார்.

### யாழ்.-சென்னை...

கோவை, கேரளத்தில் திருவனந்தபுரம், கொச்சி உள்ளிட்ட தென்னிந்திய பகுதி களை இணைக்கும் வகையிலும் புதிய விமான சேவைகள் இயக்கப்படும் என்று பிட்ஸ் எயார் நிறுவன துணைத் தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான பீட்டர் ஹில் தெரிவித்தார்.

இது குறித்து திருச்சியில் அவர் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்ததாவது,

பிட்ஸ் எயார் என்ற தனியார் விமான நிறுவனம், எதிர்வரும் டிசம்பர் 08 ஆம் திகதி முதல் திருச்சி - கொழும்பு இடையே தனது முதல் விமான சேவையைத் தொடங்கவுள்ளது. முதல்கட்டமாக வியாழன், சனி, ஞாயிறு என வாரத்தில் 3 சேவைகளை வழங்கத் திட்ட மிட்டுள்ளது.

தற்போது தொடங்கப்படவுள்ள விமான சேவைகளுடன் திருச்சி மற்றும் சென்னைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புதிய விமான சேவைகளை தொடங்கும் திட்டமும், பயணி களிடமிருந்து கிடைக்கும் வரவேற்பின் அடிப் படையில் சென்னை, மதுரை, கோவை, கேரளத் தில் திருவனந்தபுரம், கொச்சி உள்ளிட்ட தென்னிந்திய பகுதிகளை இணைக்கும் வகையிலும் புதிய விமானசேவைகள் இயக்கப்படும். அடுத்தாண்டுக்குள் இந்த சேவைகள் வழங்கப்பட வாய்ப்புள்ளது.

இந்தியாவில் உள்ள மற்ற விமான நிலை யங்களுடன் ஒப்பிடுகையில், திருச்சி-இலங்கை இடையே பயணிகள் அதிகரித்து வருவ தால் விமான சேவைகளையும் அதிகரிக்கவேண்டி யுள்ளது. திருச்சியை எங்கள் வரைபடத்துடன் இணைப்பதன் மூலம் இந்தியாவுடனான முதல் சேவையை தொடங்கியுள்ளோம் என்று அவர் கூறினார்.

### தேர்தல்...

தெரிவுக்குழு தீர்மானங்களை நடைமுறைப் படுத்தல், மக்கள் மயப்படுத்தல் தொடர்பில் அநுராதபுரம் நகரில் இடம்பெற்ற கலந்துரை யாலில் பங்கேற்று கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலை நடத்துவதற்கு நிதியில்லை என்பது எங்களுக்கு பிரச்சினை இல்லை. அந்த விடயத்தை அரசாங்கம் பார்த்துக்கொள்ளும். அடுத்த வருடம் மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாக உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்தவேண்டும்.

தேர்தல் ஆணைக்குழு என்ற வகையில் அதற்கான செயல்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம். மக்கள் பிரதிநிதிகளால் நிர்வகிக்கக்கூடிய மாகாண சபைகளை அதிகா ரிகள் ஊடாக நிர்வகிப்பது குறித்து தேர்தல் ஆணைக்குழு உடன்படாது.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே தேர்தல் ஆணைக்குழு தொடர்ந்தும் இருக்கின்றது. இலங்கைப் பிரஜை அல்லாத ஒருவர் தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்கின்றார் என்றாலும் கூட தற்போது நடைமுறையிலுள்ள தேர்தல் சட்டங்களின் பிரகாரம் அவரை நிராக ரிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு இல்லை.

அதற்கான தீர்மானத்தைப் பெற்றுக்கொள்ள உயர்நீதிமன்றத்தை நாடவேண்டிய நிலை காணப்படுகின்றது. ஆகவே, தான் தேர்தல் சட்டங்களில் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது என்றார்.

# இராதா எம்.பியின் ஊழல் குற்றச்சாட்டில் எந்தவித உண்மைத்தன்மையும் கிடையாது

## நிரூபித்தால் பதவி விலகத் தயாரென கொட்டகலை தவிசாளர் பிரசாந்த் அறிவிப்பு





(எஸ்.கணேசன்)

கொட்டகலை பிரதேச சபையில் ஊழல் இடம்பெற்றுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே. இராதாகிருஷ்ணன் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்து அப்பட்டமான பொய்யாகும். ஊழல் இடம்பெற்றுள்ளது என்பதை நிரூபித்தால் பதவி விலகத் தயார் - என கொட்டகலை பிரதேச சபையின் தவிசாளர் இராஜமணி பிரசாந்த் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம், நுவரெலியா பிரதேச செயலக மண்டபத்தில் அதன் தலைவரும், இ.தொ.காவின் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று (28) நடைபெற்றது.

இ.தொ.காவின் தவிசாளரும், நிதிச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன், பிரதேச சபைகளின் தவிசாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோர் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

இதன்போது கொட்டகலை பிரதேச சபை தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன், அதியுயர் சபையான நாடாளுமன்றத்தில் பொய்யான கருத்துகளை முன்வைத்துள்ளார் எனக்கூறி, அதற்கான ஆதாரங்களை தவிசாளர் இராஜமணி பிரசாந்த் முன்வைத்தார். விசேட விளக்கமொன்றையும் முன்வைத்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர்,

"கொட்டகலை பிரதேச சபைக்கு நகர அபிவிருத்தி சபை 3 ஏக்கர் காணி வழங்கியுள்ளதென இராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். அது பொய். ஒரு ஏக்கர் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அது இலவசமாக வழங்கப்படவில்லை. அதற்கும் மாதாந்தம் நாம் கூலி செலுத்துகின்றோம்.

இராதாகிருஷ்ணன் பிரதேச சபை தவிசாளராக இருந்த காலத்தில்தான் ஊழல்கள் இடம்பெற்றுள்ளன. 18 குடியிருப்புகள் இருந்த பகுதியொன்றில் இலஞ்சம் வாங்கிக்கொண்டு, தனக்கு வேண்டப்பட்ட ஐவருக்கு மாத்திரமே உறுதிப்பத்திரம் பெற்றுக்கொடுத்துள்ளார். அவர் இராஜாங்க அமைச்சராக இருந்துள்ளார். எனவே, பொறுப்புடன் கதைக்க வேண்டும், தகவல்களை வெளியிட வேண்டும். ஒருசிலரை திருப்திப்படுத்துவதற்காக பொய்யுரைக்கக்கூடாது. கொட்டகலை பிரதேச சபை, நுவரெலியா மாவட்டத்திலேயே சிறந்த பிரதேச சபை என்பதற்காக இரு தடவைகள் விருது வென்றுள்ளது. ஊழல் எதுவும் இடம்பெறவில்லை. அவ்வாறு இடம்பெற்றுள்ளதென நிரூபித்தால் பதவி விலக நான் தயார். முறைப்பாடுகளை முன்வைக்க இடங்கள் உள்ளன. அங்கு முறைப்பாடுகளை தெரிவிக்கலாம்.

கடந்த காலத்தில் மலையக மக்கள் முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்திய நுவரெலியா பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சதாசிவனும், முன்னாள் செயலாளராக இருந்த பிரதீப் ஆகியோரும் நுவரெலியா பிரதேச சபையின் புதிய சபை கட்டிடத்தை நிர்மாணிக்கும் பணியில் ஊழல் செய்துள்ளதாவும், அதற்கான ஆதரங்களும் தன்னிடம் உள்ளதாகவும் பிரதேச சபை தவிசாளர் ராஜமணி பிரசாந்த் மேலும் தெரிவித்தார்.

இறுதியில் எம்.பி. இராதாகிருஷ்ணன் மற்றும் தவிசாளர் ராஜமணி பிரசாந்த ஆகியோர் முன்வைத்துள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையொன்றை முன்வைக்குமாறு பிரதேச செயலாளருக்கு, குழுவின் தலைவர் ஜீவன் தொண்டமான் ஆலோசனை வழங்கினார்.

# "எனக்கு யாரும் வகுப்பெடுக்க வேண்டாம்" வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் காட்டம்!



வடமாகாண ஆளுநர் என்ற வகையில் மக்கள் நலன்சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களுக்காக சட்ட திட்டங்களை உரிய வகையில் நிறைவேற்றுவேன். தமது வரம்பு தெரியாமல் எனக்கு வகுப்பெடுக்கக் கூடாது - என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

ஆளுநர் செயலகத்தால் அனுப்பிவைக்கப்பட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டதாவது,

ஆளுநர் தான் நினைத்தபடி நியதிச் சட்டங்களை உருவாக்கி வர்த்தமானி வெளியிடுகிறாரென என் மீது குற்றஞ்சாட்டி, சிலர் தம்மை மக்கள் மத்தியில் தலைவர்களாகக் காட்ட முயல்கின்றனர்.

வடமாகாண சபை செயற்பாட்டில் இல்லாத காலத்தில் மக்கள் நலன்சார்ந்த பல நியாதிக்கச் சட்டங்கள் ஏற்கனவே உருவாக்கப்பட்டு செயல்படுத்தாமல் உள்ளன.

ஆளுநரின் அதிகாரத்தின்கீழ் 154C மாகாண சபையொன்றுக்கு நியதிகளை இயற்றும் அதிகாரம், அவற்றிலுள்ள விடயங்கள் தொடர்பான நிறைவேற்று அதிகாரம், அந்த மாகாண சபை ஸ்தாபிக்கப்பட்ட மாகாண ஆளுநரால் நேரடியாகவோ அல்லது அமைச்சர்கள் சபையின் அமைச்சர்கள் மூலமாகவோ அல்லது கீழ்நிலை அதிகாரிகள் மூலமாகவோ செயல்படுத்தப்படும்.

பிரிவு 154F அதைத்தான் அரசியலமைப்புச் சட்டம் சொல்கிற நிலையில் ஒவ்வொரு சட்டமும் மாகாண நிர்வாகத்தின் மூலம் செயல்படுத் தப்படுகிறது. பல சட்டங்கள் பல ஆண்டுகளாக முடிக்கப்படாமல் வைக்கப்பட்டுள்ள நிலையில், சிலருக்கு மறுபரிசீலனை தேவைப்படுகிறதோடு தமது அதிகார வரம்பு தெரியாமல் பேசுகின்றனர்.

அரசியலமைப்பில் எழுதப்பட்ட மாகாண அதிகாரங்கள் பல தமது செயல்பாடுகளை செய்யாத நிலையில் அவை ஒவ்வொன்றாக சரிபார்க்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நிர்வாக ரீதியாகவும் இடைவெளிகள் உள்ளதோடு அதிபர், ஆசிரியர்களின் இடமாற்றங்கள் யாழ்ப்பாணத்திற்கு சாதகமான கொள்கையைக் கொண்டிருந்தன.

கடந்த காலங்களில் மாகாண அரச சேவை சில வட்டத்துக்குள் முடக்கிவிடப்பட்ட நிலையில் சகல மக்களுக்கும் சென்றடையும் வகையில் இலகுபடுத்தப்பட்டுள்ளது.

ஆகவே, ஆளுநர் என்ற வகையில் வடக்கு மக்களுக்கான அபிவிருத்திகளை மேற்கொள்ள உரிய சட்டதிட்டங்களை செயல்படுத்துவேன். யாரும் எனக்கு கற்பிக்க வேண்டாம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநர் தான் நினைத்தவாறு நியதிச் சட்டங்களை இயற்றி வர்த்தமானி அறிவித்தல்களை விடுத்துள்ளார் எனக் கூறி அதற்கு எதிராக தாம் ஜனாதிபதியிடம் முறையிட தீர்மானித்துள்ளதாக வடமாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# களியாட்ட விருந்தின்போது போதை மாத்திரை பாவனை

## வெலிகமவில் எண்மர் கைது

வெலிகம கடற்கரைப் பகுதியில் போதைப் பொருள் மற்றும் போதை மாத்திரைகளுடன் 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முகநூலூடாக ஒழுங்குசெய்யப்பட்ட களியாட்ட விருந்தொன்று வெலிகம கடற்கரையில் இடம்பெறுவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

பொலிஸாரின் சுற்றிவளைப்பில் வெலிகம, ரணால, திஸ்ஸமஹாராம, கனன்கே, தெலிஜ்ஜவில, சியாவில மற்றும் பெலியத்த ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் எண்மரையும் மாத்தறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.



விடுதலைப் போராட்டத்தில் மரணித்தவர்கள் நவம்பர் 21ஆம் திகதிமுதல் நினைவுகூரப்பட்டு, நவம்பர் 27 மாவீரர் புலம்பெயர் நாடுகளிலும் தமிழர் தாயகப் பிரதேசத்திலும் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இதனடிப்படையில் புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் புலிக் கொடிகளை தாங்கியவாறு மாவீரர் தினம் அனுஷ்டித்தனர். லண்டனில் உள்ள டவுனிங் வீதியில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

# தவறு செய்யும் சாரதிகளுக்கு புள்ளிகள் ரீதியாக தண்டனை

## இலங்கையில் நடைமுறைக்கு வரும் புதிய முறைமை



சாரதி செய்யும் தவறுகளுக்கு புள்ளிகளைக் குறைத்து அதனுடன் தொடர்புடைய தண்டனைகளை விதிக்கும் முறைமை இலங்கையில் நடைமுறைக்குக் கொண்டுவரப் படவுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வீதியில் வாகனங்களை செலுத்தும்போது தவறு செய்யும் சாரதிகளுக்கு சாரதி அனுமதிப் பத்திரத்தின்கீழ் 24 புள்ளிகளுக்கு உட்பட்டு அபராதம் விதிக்கப்படும்.

ஒரு ஓட்டுநர் 24 புள்ளிகள் வரம்பை அடைந்தவுடன், அவரது ஓட்டுநர் உரிமம் ரத்து செய்யப்படும். குறித்த சாரதி மீண்டும் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள பரீட்சை மற்றும் பயிற்சி மூலம் உரிமத்தை மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

புதிய முறையின் கீழ் அபராதங்களை சம்பவ இடத்திலோ அல்லது தபால் நிலையத்திலோ, இணைய வழியில் செலுத்தலாம். ஒரு ஓட்டுநருக்கு அபராதம் விதிக்கப்பட்டு, அதே குற்றத்திற்காக புள்ளிகளும் கழிக்கப்பட்டால் அந்த நபர் அதை நீதிமன்றத்தில் சவால் செய்யலாம். ஒரு ஓட்டுநர் ஒரு வருடத்தில் 2 புள்ளிகளை மட்டுமே இழந்தால், அடுத்த ஆண்டு 24 புள்ளிகளை மீட்டெடுக்க அவருக்கு 2 புள்ளிகள் வழங்கப்படும். ஒரு தசாப்தத்திற்கும் மேலாக உருவாக்கப்பட்டுவரும் இந்த முறைமையை அடுத்த வருடம் அறிமுகப்படுத்த போக்குவரத்து அமைச்சு உத்தேசித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இந்த வாரம் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் வெளியிடப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

# டிசம்பர் முதல் ஒரு இலட்சம் எரிவாயு சிலிண்டர்கள் நாளாந்த விநியோகம்

## லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு

எதிர்வரும் முதலாம் திகதிமுதல் ஒரு இலட்சம் சமையல் எரிவாயு சிலிண்டர்களை நாளாந்தம் சந்தைகளுக்கு விநியோகிக்கவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

நேற்றும் இன்றும் தலா 40,000 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக லிட்ரோ நிறுவனம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

நேற்று (27) ஹோட்டல்கள், தொழிற்சாலைகள் மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்காக மாத்திரம் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டதாக நிறுவனம் அறிவித்துள்ளது.

4,000 மெட்ரிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பலொன்று நாளை 30ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கிணங்க பண்டிகை காலத்தை முன்னிட்டு சமையல் எரிவாயுவிற்கான முற்பதிவு செய்யப் பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

# ஈஸ்ரர் தாக்குதல் தொடர்பில் கைதாகி விடுதலையானவர் வெட்டிக்கொலை

## மட்டக்குளியில் சம்பவம்

மட்டக்குளிய பிரதேசத்தில் ஒருவர் கொடூரமான முறையில் வெட்டிக் கொலைசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதே பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய நபரே இவ்வாறு நேற்று கொலை செய்யப் பட்டுள்ளார்.

காரில் வந்த இருவரே இந்தக் கொலையை செய்துள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த நபர், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்குளி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# மீனவர்களுக்கு ஓய்வூதியம்

மீனவ சமூகத்தினருக்கான ஓய்வூதியத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் அறிவித்துள்ளது.

விவசாய காப்புறுதி சபையின் ஊடாக இந்த ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த தெரிவித்தார்.

# குளவிக்கொட்டுக்கு இலக்காகி 17 மாணவர்கள் பாதிப்பு

(எஸ்.கணேசன்)



நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட லிந்துலை சரஸ்வதி ரோயல் கல்லூரியின் மாணவர்கள் 17 பேர் நேற்று மதியம் 2.30 மணியளவில் குளவிக்கொட்டுக்கு இலக்காகிய நிலையில் லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாடசாலையில் இருந்த வேளையில் அப்பகுதியில் இருந்த மரத்தில் காணப்பட்ட குளவிக்கூடே இவ்வாறு கலைந்து வந்து மாணவர்களை கொட்டியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதன்போது குளவிக்கொட்டுக்கு இலக்கான மாணவர்கள் ஆரம்பப் பிரிவைச் சேர்ந்த ஆண் மற்றும் பெண் பிள்ளைகள் என பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

குளவிக்கொட்டுக்கு இலக்கான மாணவர்கள் தொடர்ந்தும் லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

# பொன்னாலை கடற்கரையில் காற்றாலை மின் கோபுரங்களை நிறுவ கலந்துரையாடல்



Musalpetti Wind Power (PVT) Ltd நிறுவனத்தினரால் பொன்னாலையில் காற்றாலை மின் உற்பத்திக் கோபுரங்கள் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை வலி. மேற்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

பொன்னாலை தொடக்கம் அராலி வரையான கடற்கரையோரத்தில் 15 காற்றாலைக் கோபுரங்களை அமைப்பதற்கு மேற்படி நிறுவனத்தினால் இடங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இக்கோபுரங்களை அமைப்பதிலுள்ள சாதக, பாதக அம்சங்கள் தொடர்பாக சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு தெளிவூட்டுவதற்காக இக்கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் கலந்துகொண் டிருந்த துறைசார்ந்த அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் இக்கோபுரங்களின் சாதக, பாதக அம்சங்கள் தொடர்பாக கேள்விகளை எழுப்பியிருந்தனர். குறித்த நிறுவன உத்தியோகத்தர்கள் அதற்குரிய பதில்களை வழங்கினர்.

இதன்போது, இடத்தெரிவு தொடர்பாக கிராமமட்டத்தில் பொதுமக்களுடன் கலந்துரையாடி இறுதி முடிவு எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத திட்டங்களாயின் அதனை செயற்படுத்த முடியும் என இங்கு கலந்துகொண்ட மக்கள் பிரதிநிதிகளும் சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளும் தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடலில் வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன் மற்றும் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.





ஒருகொடவத்தை அவிசாவளை வீதி மஜித் பிளேஸ் அருள்மிகு ஸ்ரீ துர்கா காளியம்மன் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா ஆலய பிரதம குருக்கள், சோதிட சிரோன்மணி, கிரியா ஜோதி ஸ்ரீ சிவ சிவகுமார் சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெற்றது. (படங்கள்.எம் நசார்)

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2022, நவம்பர் 29ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை**

# ஆக்கபூர்வ தீர்வே தேவை!

தாயக விடுதலைக்காகத் தம் இன்னுயிரை ஈந்த வீரமறவர்களுக்கு, உயிர்க் கொடையாளர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கில் பெருந்திரளான மக்களின் பங்கேற்புடன் பேரெழுச்சியுடன் உணர்வுபூர்வமாக நேற்று முன்தினம் நடைபெற்றன.

தாயகத்தில் உள்ள துயிலும் இல்லங்கள் மற்றும் பொது இடங்கள் கண்ணீரால் நனைந்தன.

தமிழர் தாயகத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகளுக்குப் பொலிஸார், படையினர் மற்றும் புலனாய்வாளர்கள் தடைகளை ஏற்படுத்திய போதிலும், மக்கள் இவற்றைக் கண்டு அஞ்சாமல் துணிவுடன் அலைகடலெனத் திரண்டு துயிலும் இல்லங்களுக்கும், பொது இடங்களுக்கும் சென்று வீரமறவர்களை நினைவேந்தி சுடரேற்றினர்.

தாயகத்திலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களிலும், பொது இடங்களிலும் நேற்று முன்தினம் மாலை 6:05 மணிக்கு நினைவு ஒலி எழுப்பப்பட்டது. 6:06 மணிக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டது. 6:07 மணிக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது.

அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களிலும் பொது இடங்களிலும் சமநேரத்தில் சுடர்கள் கொழுந்துவிட்டு எரிந்தன. அந்த ஒளி வெள்ளத்தின் மத்தியில் மக்கள் கண்ணீர் விட்டுக் கதறியழுது தமது உறவுகளை நினைவுகூர்ந்தனர்.

சிங்களப் பேரினவாத அரச இயந்திரத்தின் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை எதிர்கொண்டு துவண்டு கிடக்கிறது ஈழத் தமிழினம். தமிழ்த் தேசிய இனத்தின் சொந்த வரலாற்றில் அது மறந்துவிட முடியாத மிக முக்கியமான தினமான மாவீரர் தினம். தம் இனத்துக்காக தங்களையே தற்கொடையாக்கி, இந்த விடுதலைப் போராட்ட வேள்வியில் ஆகுதியாகத் தந்த வீர மறவர்களின் உயரிய ஈகத்தை நினைவேந்தும் நாள் அது.

தமிழினத்தின் ஆயுதப் போராட்டத்தை அங்கீகரிக்க மறுப்பவர்கள் கூட, அந்தப் போராட்டத்தில் தங்களையே தற்கொடையாக தந்த அந்த யுகபுருஷர்களின் ஈகத்தை, தியாகத்தை எண்ணித் தலைவணங்குவர். மனித நேயமும், மனிதப் பண்பியல்பும் கொண்ட எவரும் இதற்கு விதிவிலக்கல்லர்.

இன வன்முறைகளினாலும், அடக்குமுறைகளினாலும், கோர யுத்தத்தினாலும், பேரழிவுகளையும், இழப்புகளையும், துன்ப துயரங்களையும் சந்தித்து நிற்கும் தமிழினத்துக்கு இழப்புகள் தொடர்பில் நினைவேந்தல் மேற்கொண்டு, மனதை ஆற்றுப்படுத்தும் உரிமை இருக்கின்றது. அதையே தமிழினம் நேற்று முன்தினம் ஆற்றியுள்ளது.

சர்வதேச அளவில் அடிப்படை மனித உரிமையாக மதிக்கப்படுவது இந்த நினைவேந்தல் உரிமை.

இழப்பின் ஆறுதலுக்கான மனித குல உரிமை அது.

அதுவும் பேரிழப்பையும் போர் அவலங்களையும் சந்தித்த ஒரு சமூகம் அந்தத் துன்ப, துயரங்களில் இருந்து மீண்டெழுவதற்கும், தன்னை மீள உயிர்ப்பித்துக் கொள்வதற்கும் இந்தக் கூட்டு நினைவேந்தல் மிக முக்கிய அடிப்படை மார்க்கம். கூட்டு நினைவேந்தல் மூலம் தன்னை மீள உயிர்ப்பித்துக் கொள்கிறது தமிழர் தேசம்.

தென்னிலங்கைச் சிங்களத்தின் அதிகார வர்க்கத்தின் எதேச்சதிகாரத்தின் ஒரு வடிவை நாம் வேறுபடுத்தி அவதானிக்க ஒரு வாய்ப்புக் கிட்டியிருக்கின்றது. யுத்தம் முடிந்த கடந்த 13 ஆண்டுகளிலும் இலங்கையின் பாதுகாப்புச் சட்டங்களில் ஏதும் பெரிய மாற்றங்கள் ஏற்படவில்லை. சட்டங்கள் அப்படியே இருக்கின்றன. ஆனால், அரசியல் தலைமைத்துவங்கள்தான் அவ்வப்போது மாறியிருக்கின்றன.

எனினும், தமிழர்களின் நினைவேந்தல் உரிமை தொடர்பில் சிங்கள பொலிஸ் மற்றும் படையணிகளின் அணுகுமுறை காலத்திற்கேற்ப ஒன்றுக்கொன்று தலைகீழாகவும், முரண்பாடாகவும் இருக்கும் சட்ட ஆட்சி நிலைமையை இங்கு நாங்கள் காண்கிறோம். சட்டங்கள் மாறவில்லை. ஆயினும், அரசியல் தலைமைகள் மாறினால் சட்ட வியாக்கியானம் மாறும் விசித்திரமான விபரீதமான ஒரு சட்டவாட்சி நிலவும் ஒரு நாட்டில் நாம் வாழ்கின்றோம் என்பதுதான் உண்மை.

கோட்டாபய ஜனாதிபதியாக இருந்தபோது மாவீரர் தினத்தன்று நிலவிய நெருக்குவாரங்கள் இம்முறை இல்லாததை கவனிக்க முடிந்தது. இனப்பிரச்சினை தீர்வுக்கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்துவரும் சூழ்நிலையில் நல்லிணக்க அடிப்படையில் அவ்வாறான கெடுபிடிகளை அரசாங்கம் இம்முறை விதிக்காமல் இருந்திருக்கக் கூடும். அது பாராட்டுக்குரியது. அதேபோல் உயிரிழந்த உறவுகளின் நினைவுகளை அவர் தம் குடும்பங்கள் அரசியல் கலப்பின்றி நினைவுகூர்ந்ததும் இம்முறை கவனிக்கப் படவேண்டிய ஒன்று.

மாவீரர் தின நினைவுகூரலுக்கு இடமளித்தார் என்று ஜனாதிபதி ரணிலையோ அல்லது ஆட்சி உயர்பீடத்தையோ எடுத்த எடுப்பில் பாராட்டி வாழ்த்திவிட முடியாது. கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இரவு கூடிய கூட்டம் அந்த மக்களின் துன்பத்தையும் அவர்களின் ஓர்மத்தையும் ஒருசேர வெளிப்படுத்தி நிற்கின்றது. நியாயமான ஒரு போராட்டத்திற்கு தமது உறவுகளை ஈகையாக கொடுத்திருப்பதாக கருதுவதால்தான் இந்தளவு வருடங்களுக்குப் பின்னரும் ஓரிடத்தில் ஒன்றுசேர்ந்து தீபத்தை ஏந்தி நின்றனர் அந்த மக்கள். அந்த மக்களின் மனோநிலையை அவர்கள் எதை வேண்டுகிறார்கள் என்பதை இப்போதாவது ஆட்சியாளர்கள் புரிந்துகொள்வார்களா?

வெறுமனே தமிழரை புலிகளாக பார்த்த தென்னிலங்கை எடுத்த எடுப்பில் தமிழரின் அபிலாஷைகள் குறித்து அக்கறை செலுத்தி விடாது. இப்போதும்கூட ரணில் அடுத்த தேர்தலில் தனக்கு ஆதரவாக தமிழ்த் தலைவர்கள் இருக்கவேண்டுமென காய்களை நகர்த்துகிறாரே தவிர அவரின் அமசடக்கு பாணியை, அமைதியை வைத்து அவர் ஒரு உன்னத ஜனநாயகவாதி என்று நினைத்து ஏமாந்து விடக்கூடாது. ரணில் தனது வார்த்தைகளை செயலில் காட்டவேண்டும். தீர்வு முயற்சிகளை அடுத்தகட்டத்துக்கு கொண்டுசெல்லவேண்டும். மாவீரர் தின நினைவுகூரல் என்பது மக்களின் உரிமை. அதற்கு ரணிலின் அனுமதி தேவையில்லை.தேவை, நடைமுறைச் சாத்தியமான ஆக்கபூர்வ தீர்வே.

# பெருந்தோட்டப்பகுதிகளில் கல்வியை இடைநிறுத்தும் பிள்ளைகளின் எண்ணிக்கை கணிசமானளவு அதிகரிப்பு



கொவிட் பெருந்தொற்று நோய் பரவுவதற்கு முன்னதாகவே ஆரம்ப பாடசாலை, இரண்டாம் நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி என்ற மூன்று மட்டங்களிலும் தோட்டப்பகுதிகளில் கல்வியை இடைநிறுத்தும் பிள்ளைகளின் வீதத்தில் கடும் அதிகரிப்பு

## பெற்றோரின் வருமானம் போதாமல் இருப்பதால் சம்பாத்தியம் தேட தொழிலில் ஈடுபடும் சிறுவர்கள்

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இலங்கையின் ஏனைய சகல சமூகங்களையும் விட மிகவும் கூடுதலாக பாதிக்கப்பட்டிருப்பவர்கள் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களே.

கொவிட்-19 பெருந்தொற்று நோய் காலகட்டத்தில் ஏற்பட்ட தொழில் இழப்புகள், ஊதியக் குறைப்பினாலும் கூட அவர்களே கூடுதலாக பாதிக்கப்பட்டார்கள். அதில் இருந்து ஓரளவேனும் விடுபடுவதற்கு முன்னர் தற்போதைய நெருக்கடி வந்து தோட்டத்தொழிலாளர்களை பெரும் சமூக, பொருளாதார இடருக்குள்ளாக்கியிருக்கிறது.

இலங்கை சிறுவர்கள் இன்று சத்துணவுப் பற்றாக்குறையினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் தோட்டத்தொழிலாளர் சமூகத்தின் சிறார்களே அதனால் மிகவும் கூடுதலாக பாதிக்கப்படுபவர்களாக இருப்பார்கள் என்பதை சொல்லத்தேவையில்லை. அந்த சிறுவர்களின் கல்வியும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

கல்வியை இடையில் நிறுத்தும் பெருந்தோட்டப் பகுதி சிறுவர்களின் எண்ணிக்கை கடுமையாக அதிகரித்திருக்கிறது என்று ஆய்வுகள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. பெற்றோரின் வருமானம் வாழ்க்கைச் செலவுக்கு அறவே போதாமல் இருப்பதால் பிள்ளைகளும் ஏதாவது சம்பாத்தியத்தை தேடுவதற்காக கல்வியை இடையில் நிறுத்தும் போக்கு அதிகரித்திருக்கிறது என்று கொள்கை ஆய்வு நிறுவனம் ( Institute of Policy Studies) கூறுகிறது.

பாடசாலைக்கு செல்லும் வயதிலுள்ள பிள்ளைகள் தொழில் வாய்ப்பை தேடுவதற்காக படிப்பை இடையில் நிறுத்துவதை தடுக்க தோட்டப்பகுதிகளில் வயது வந்தவர்களின் சம்பாதிக்கும் ஆற்றலை விரிவுபடுத்த புதிய செயற்றிட்டங்களை அறிமுகப்படுத்துவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும் என்று அந்நிறுவனம் யோசனை கூறியிருக்கிறது.

பெருந்தோட்டப் பகுதிகளில் வயது வந்தவர்களின் வருமான மூலங்களையும் ஆதாரங்களையும் அதிகரிப்பதற்கு விசேட செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று அந்த பொருளாதார நிபுணர்கள் அமைப்பின் ஆய்வு அறிக்கை கோரிக்கை விடுத்திருக்கிறது. இவ்வாறு செய்வதன் மூலமாக பொருளாதார நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதை தவிர்த்து படிப்பில் கவனம் செலுத்துவதற்கு பிள்ளைகளை ஊக்கப்படுத்தமுடியும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பெருந்தோட்டப் பகுதிகளின் சிறுவர்கள் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகள் குறித்தே இந்நிறுவனம் ஆய்வை மேற்கொண்டது. பாடசாலைக்கு செல்லாமல் கல்வியை இடைநிறுத்தும் பிள்ளைகளின் எண்ணிக்கையில் ஏற்பட்டிருக்கும் கடுமையான அதிகரிப்பை தடுத்து நிறுத்துவதற்கான வழிவகைகளில் நிறுவனம் கவனம் செலுத்தியது.

கொவிட் பெருந்தொற்று நோய் பரவுவதற்கு முன்னதாகவே ஆரம்ப பாடசாலை, இரண்டாம் நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி என்ற மூன்று மட்டங்களிலும் தோட்டப்பகுதிகளில் கல்வியை இடைநிறுத்தும் பிள்ளைகளின் வீதத்தில் கடும் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. கல்வி மட்டங்களின் உயர்வுடன் சமாந்தரமாக கல்வியை இடைநிறுத்தும் பிள்ளைகளின் சதவீதமும் அதிகரிக்கிறது. அதாவது ஆரம்பக்கல்வியை இடைநிறுத்துபவர்களை விடவும் இரண்டாம் நிலை மற்றும் கல்லூரி மட்டங்களில் கல்வியை இடைநிறுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது.

தோட்டப்பகுதிகளில் ஆரம்ப பாடசாலைகளில் கல்வியை இடைநிறுத்துபவர்கள் 4 சதவீதமாகவும் இரண்டாம் நிலை பாடசாலைகளில் அது 20 சதவீதமாகவும் கல்லூரி மட்டத்தில் அது 26 சதவீதமாகவும் இருக்கின்றது. இதற்கு மாறாக, நகர்ப்புற மற்றும் கிராமப்பகுதிகளில் இந்த வீதங்கள் மிகவும் குறைவானவையாக இருக்கின்றன.

கொவிட் பெருந்தொற்று நோய்ப் பரவலுக்குப் பிறகு தோட்டப்பகுதி சிறுவர்களினால் எதிர்நோக்கப்பட்ட நிதி நெருக்கடிகளே பாடசாலைகளுக்கு போகாமல் கல்வியை அவர்களில் கணிசமானவர்கள் இடைநிறுத்துவதற்கு பிரதான காரணம். தற்போதைய பாருளாதார நெருக்கடி அவர்களின் அவலங்களை மேலும் அதிகரித்திருக்கிறது. அதனால் அவர்கள் குடும்ப அடிப்படைத் தேவைகளை சமாளிக்க பெற்றோர்களின் வருமானத்துக்கு புறம்பாக சம்பாத்தியத்தை தேடுவதற்காக பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

நிலைவரத்தில் மேம்பாட்டை ஏற்படுத்த தோட்டப்பகுதிகளில் வயது வந்தவர்கள் கூடுதல் வருமானத்தை பெறுவதற்கு வசதியாக வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.அதேவேளை பாடசாலைகளில் இலவச உணவுத் திட்டத்தை தொடர உறுதியான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். இது தோட்டப்பகுதிகளில் சிறுவர்கள் தொழிலில் ஈடுபடுவதை தடுப்பதற்கு சாத்தியமான தீர்வாக அமையும் என்று கொள்கை ஆய்வுகள் நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

உணவைப் பெறுவதற்கு பெரும் கஷ்டப்படும் பல தோட்டப்பகுதி சிறுவர்கள் வருமானம் ஒன்றை தேடுவதற்காகவே பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

பாடசாலைகள் மூடப்பட்டிருந்த காலப்பகுதியில் இணையவழி மூலமான வகுப்புகளில் பங்கேற்க முடியாமல் போன தோட்டப்பகுதி மாணவர்களில் பலரும் கல்வியை இடைநிறுத்தி பாடசாலைக்கு போகாமல் விடுகிறார்கள் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. இத்தகைய மாணவர்கள் தாங்கள் இழந்த பாடங்களை மீண்டும் கற்றுக்கொள்ள வசதியாக விசேட ஏற்பாடுகள் செய்யப்படவேண்டியதும் அவசியம். இதன் மூலமாகவே அவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டக்கூடிய சூழ்நிலையை உருவாக்கமுடியும்.

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் விதந்துரைக்கப்பட்டவாறு பூச்சிய சிறுவர் தொழிலாளர் இலக்கை 2025ஆம் ஆண்டில் அடைவதற்கு இலங்கை உறுதிபூண்டுள்ளது. சிறுவர்கள் தொழிலில் ஈடுபடுவதை ஒழிப்பதன் மூலம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு கல்வியை இடைநிறுத்தும் சிறுவர்களின் எண்ணிக்கையையும் குறைக்கமுடியும்.

ஆனால், கொவிட் பெருந்தொற்று பரவலை அடுத்து தோன்றிய சூழ்நிலைகளுடன் தற்போதைய பொருளாதார நெருக்கடியும் சேர்ந்து 2025 பூச்சிய சிறுவர் தொழிலாளர் இலக்கை அடையும் முயற்சிகளை முன்னரை விடவும் கூடுதல் சவாலுக்குள்ளாகியிருக்கின்றன.நீண்ட காலமாக பாடசாலைகள் மூடப்படுவதற்கு வழிவகுத்த பெருந்தொற்றுநோய்ப் பரவலுக்கு பிறகே பெருந்தோட்டப்பகுதிகளில் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் சிறுவர்களின் எண்ணிக்கை கணிசமானளவு அதிகரித்தது என்பதை சான்றுகள் உறுதிப்படுத்துவதாக கொள்கை ஆய்வு நிறுவனம் கூறியிருக்கிறது.

சத்யா

# சுப்பிரமணியம் சிவநாயகம் எனும் மறக்க முடியா ஊடகர்



எஸ்.சிவநாயகம், இலங்கையின் மூத்த பத்திரிகையாளரும், ஊடகவியலாளரும், அரசியல் விமர்சகரும், எழுத்தாளரும் ஆவார். இவர் ஈழத்தமிழர்களின் அரசியல் நியாயத்தை ஆங்கிலத்தில் சிறப்பாக வெளிப்படுத்தி வந்தவர்களில் ஒருவர்.

சிவநாயகம் யாழ்ப்பாணம் கொக்குவிலில் பிறந்தவர். கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கல்வி கற்றார். கல்வியை முடித்ததும் தனது சட்டக் கல்லூரிப் படிப்பிற்காக கொழும்பு சென்ற இவர், இரண்டாம் ஆண்டு சட்டப்படிப்பின் போது பத்திரிகைத்துறை ஆர்வம் காரணமாக 1953 முதல் 1955 வரை கொழும்பில் இருந்து வெளியாகும் 'டெய்லி நியூஸ்' ஆங்கில நாளிதழில் நாடாளுமன்ற நிகழ்வின் செய்தி ஆசிரியராகப் பணியாற்றினார்.

அதன் பின்னர் 'டெய்லி மிரர்' பத்திரிகையில் 1961 முதல் 1969 வரை பணியாற்றினார். 'டெய்லி மிரர்' பத்திரிகையில் ஃபோரம் (Forum) என்ற பெயரில் இவர் எழுதிய பத்தி எழுத்துகள் பிரபலமானவை . 1970களில் இலங்கை சுற்றுலா சபையின் பிரசுரங்களின் ஆசிரியராக இருந்தார். "Leisure" என்ற பெயரில் ஒரு ஆங்கில இதழையும் நடத்தி வந்தார். 'வோல்ட்டர் தொம்சன்' என்ற அமெரிக்க நிறுவனத்திலும் பணியாற்றினார். சன்சோனி ஆணைக்குழுவின் விசாரணைப் பதிவுகளை வெளிக்கொணரும் 'Sansoni Commission Evidence' என்ற ஆங்கில இதழிலும் பணியாற்றியுள்ளார் .

1980களில் தமிழர்கள் ஆயுதப் போராட்டத்தில் இறங்க சிவநாயகம் யாழ்ப்பாணம் வந்து அங்கு 'சட்டர்டே ரிவ்யூ' (Saturday Review) என்ற பெயரில் ஆங்கில வார இதழை ஆரம்பித்தார். இவரது பத்திரிகை நிலையம் இலங்கை இராணுவத்தினால் எரியூட்டப்பட்டு, இலங்கை அரசால் தடைசெய்யப்பட்டது. இதனைஅடுத்து இவர் கடல் மார்க்கமாக தமிழ்நாடு சென்று அங்கு தமிழ் தகவல் மையத்தில் பணியாற்றினார்.

**தமிழகத்தில் சிறைவாசம்**

'தமிழ்நேசன்' என்ற பத்திரிகையை தமிழகத்தில் வெளியிட்டார். இதில் அவர் ஈழத்தமிழர்களின் போராட்டங்களை விரிவாக எழுதினார். இதனால் இந்திய அரசு இவரை தடா சட்டத்தில் சிறையில் அடைத்தது. சிறையில் நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில், நிபந்தனையின் பேரில் 1993ஆம் ஆண்டில் இவருக்கு சிறையில் இருந்து விடுதலை கிடைத்து பிரான்ஸில் அடைக்கலம் பெற்றார்.

பிரான்ஸில் இருந்து இவர் லண்டன் சென்று புலம்பெயர்ந்த நிலையில், 'Hot Spring' என்ற ஆங்கில மாத இதழை அங்கு ஆரம்பித்து நடத்தினார்.

**இறுதிக்காலம்**

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இலங்கை திரும்பிய சிவநாயகம், தனது 80ஆவது அகவையில் 2010 நவம்பர் 29ஆம் நாள் கொழும்பில் காலமானார் . இவரின் எழுத்துகள் தமிழர் பிரச்சினைகள் பலவற்றை வெளியில் கொண்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

## இன்றைய நாளில்...

- ✱ 1855 – துருக்கியில் தாதியர் பயிற்சிக்காக புளோரன்ஸ் நைட்டிங்கேல் நிதியம் நிறுவப்பட்டது.
- ✱ 1877 – தோமஸ் ஆல்வா எடிசன் போனோகிராப் என்ற ஒலிப்பதிவுக் கருவியை முதற்தடவையாகக் காட்சிப்படுத்தினார்.
- ✱ 890 – ஜப்பானில் முதலாவது நாடாளுமன்றம் கூடியது.
- ✱ 1899 – பார்சிலோனா கால்பந்துக் கழகம் அமைக்கப்பட்டது.
- ✱ 1929 – அமெரிக்கர் ரிச்சார்ட் பயேர்ட் தென் முனை மேல் பறந்த முதல் மனிதரானார்.
- ✱ 1947 – பாலஸ்தீனத்தைப் பிரிப்பதென ஐக்கிய நாடுகள் பொதுச் சபை முடிவெடுத்தது.
- ✱ 1961 – நாசாவின் மேர்க்குரி-அட்லஸ் 5 விண்கலம் சிம்பன்சி ஒன்றை ஏற்றிக்கொண்டு விண்ணுக்கு அனுப்பப்பட்டது. இது பூமியை இரு தடவைகள் சுற்றிவந்து புவேர்ட்டோ ரிக்கோவில் இறங்கியது.

## நக்கல் நமசிவாயம்

**மாவீரர் தினத்துக்கு அனுமதிச்சாராம் ரணில்..! செல்வம் எம்.பி. புகழ்ந்து தள்ளுறார்..! அப்போ கருணாவைப் பிரிச்சு இயக்கத்த ரெண்டா உடைச்சது யாராம்..?**



# அரச மற்றும் தனியார் துறையை ஒன்றிணைத்து நாட்டின் அபிவிருத்திப் பணிகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவிப்பு





கட்டட நிர்மாணத்துறையில் வேலைகள் நிறுத்தப்படுவதால் பெரும் எண்ணிக்கையானவர்களுக்கு தொழில் இல்லாமல் போகும் பின்னணியில் அரச மற்றும் தனியார் துறையினரை ஒன்றிணைத்து எதிர்கால அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க அரசாங்கம் கொள்கை ரீதியில் தீர்மானித்திருப்பதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு அமைச்சரின் தலையில் அண்மையில் (22) நாடாளுமன்றத்தில் கூடியபோது, நகர அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வினவியபோதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அபிவிருத்திப் பணிகளுக்குச் செலவு செய்வதற்கு விரும்பும் தனியார் முதலீட்டாளர்கள் காணப்படுவதால், அதற்கு திறைசேரியினால் நிதி ஒதுக்கீடு செய்யாமல் அரச மற்றம் தனியார் துறையினரை ஒன்றிணைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அதேபோன்று, நகர அபிவிருத்தியுடன் தொடர்புடைய திட்டங்கள் குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், அபிவிருத்திகளுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்றாலும் அபிவிருத்தியுடன் தொடர்புடைய பல திட்டங்கள் இதுவரை நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் 2023 ஆம் ஆண்டில் இந்த அனைத்து திட்டங்களையும் பூர்த்தி செய்ய முடியும் என்றும் அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர். உரிய திட்டங்களை மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக்களுக்கும் முன்வைத்து அவர்களது தேவைகளையும் கருத்திற் கொண்டு பூர்த்தி செய்யுமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணிகளில் தனியார் நிறுவனங்களால் நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள் இடைநடுவில் கைவிடப்பட்டமை தொடர்பில் இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். கட்டட நிர்மாணப் பொருட்களின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளதால் அவற்றின் நிர்மாணப் பணிகள் கைவிடப்பட்டிருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினார்.

இதனால் அந்தத் திட்டங்களில் வீடுகளை கொள்வனவு செய்ய ஏற்கனவே நிதியைச் செலுத்திய மக்கள் தமக்கு முறைப்பாடு செய்திருப்பதாகவும் அதிகாரிகள் குழு முன்னிலையில் தெரிவித்தனர். உரிய ஒப்பந்தங்களில் காணப்படும் நிபந்தனைகளுக்கு அமைய விரைவாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் நசீர் அஹமட், இராஜாங்க அமைச்சர்களான தேனுக விதானகமகே, அருந்திக்க பெர்னாண்டோ, சாமர சம்பத் தசநாயக, அனுராத ஜயரத்ன, மொஹான் பிரியதர்ஷன டி சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# போலி ஏ.ரி.எம். அட்டைகளை பயன்படுத்தி நூதனக் கொள்ளை

## பம்பலப்பிட்டியில் ஒருவர் கைது

பம்பலப்பிட்டி பிரதேசத்தில் வங்கிகளின் ஏ.ரி.எம். இயந்திரங்களுக்கு அருகாமையில் உலாவித் திரிந்து வாடிக்கையாளர்களின் வங்கி அட்டைகளை மோசடி செய்து அவர்களிடம் இருந்து பல இலட்சம் ரூபா பெறுமதியான பணத்தை மோசடியாக பெற்றுக்கொண்ட சந்தேகநபர் ஒருவரை பம்பலப்பிட்டி பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சந்தேக நபர் போலி வங்கி அட்டைகளை தயாரித்து வங்கிகளின் ஏ.ரி.எம். இயந்திரங்களின் அருகில் சுற்றித் திரிவதும், ஏ.ரி.எம் இயந்திரங்களில் பணம் எடுக்க ஆட்கள் வரும்போது, அந்த இயந்திரத்திலிருந்து பணம் எடுப்பதை முன்கூட்டியே சில கருவிகளைப் பயன்படுத்தித் தடுப்பதாகவும், பின்னர் சந்தேக நபர் தானாக முன்வந்து பணத்தைப் பெற உதவுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் ஏ.ரி.எம். அட்டை வைத்திருப்பவரிடமிருந்து அட்டை மற்றும் இரகசிய இலக்கங்களைப் பெற்றுக் கொண்டு அவருக்கு முன்னால் பணத்தைப் பெற முயற்சித்து, இயந்திரம் இயங்கவில்லை எனத் தெரிவித்து பின்னர் சந்தேக நபர் அந்த நபரின் அட்டையை மறைத்து வைத்துவிட்டு தன்னால் முடியாது எனக் கூறி மறைத்து வைத்திருந்த போலி அட்டையை அட்டைதாரரிடம் கொடுத்து மோசடி செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் இவ்வாறு 4 இலட்சம் ரூபாவை மோசடி செய்துள்ளார். இவர் குறித்து பம்பலப்பிட்டி பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரின் வீட்டில் இருந்து 10 போலி ஏ.ரி.எம். அட்டைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# மஹவையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான ரயில் சேவைகள் 5 மாதங்களுக்கு இடம்பெறாது

## அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

புனரமைப்புப் பணிகள் காரணமாக ஜனவரி மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 5 மாதங்களுக்கு மஹவையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான ரயில் சேவைகள் இடம்பெறாது என அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று (28) நடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் வன்னி மாவட்ட சபை உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர் பந்துல குணவர்தன, உங்கள் கோரிக்கை தொடர்பில் நாங்கள் விசேட கவனம் செலுத்துவோம். மஹவையிலிருந்து யாழ்ப்பாணம் வரையான ரயில் சேவைகள் ஜனவரி 15ஆம் திகதி முதல் ஐந்து மாதங்களுக்கு நிறுத்தப்படும்.

இக்காலப் பகுதியில் குறித்த பாதை முழுமையாக சீரமைக்கப்படும். இதன்மூலம் யாழ்ப்பாணத்துக்கு சிறந்த ரயில் சேவையை வழங்க முடியும் என்றார்.

# இளைஞர்களின் முயற்சியால் புனரமைக்கப்பட்ட வீதி




(பேருவளை பீ.எம்.முக்தார்)

நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் மிகவும் மோசமான நிலையில், கவனிப்பாரற்று இருந்த வீதியொன்றை பிரதேச இளைஞர்கள் முன்வந்து புனரமைத்துள்ள முன்மாதிரி மிக்க நிகழ்வொன்று பேருவளையில் இடம்பெற்றுள்ளது.

பேருவளை பிரதேச சபைக்குட்பட்ட பெருகமலை நளீம் ஹாஜியார் பிளேஸ் வீதியே இவ்வாறு புனரமைக்கப்பட்டுள்ளது.

இது தினமும் நூற்றுக்கணக்கான வாகனங்களும் பொதுமக்களும் பயணிக்கும் ஒரு முக்கிய வீதியாகும். ஏற்கனவே பல்லாண்டுகளுக்கு முன்னர் புனரமைக்கப்பட்ட இந்த வீதி கடந்த சில வருடங்களாக புனரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாக காட்சிளித்தது. இதனால் இவ்வீதியூடாக பயணித்த பாதசாரிகள்,மாணவர்கள் மற்றும் வாகனச்சாரதிகள் பல்வேறு அசௌகரிங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர். ஊடகங்களும் வீதியின் அவலநிலை குறித்து அடிக்கடி சுட்டிக்காட்டியதோடு, உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தும் எவ்வித பலனும் கிட்டவில்லை.

இந்நிலையில், பெருகமலை பகுதி இளைஞர்கள், சமூக சேவையாளர்கள் ஒன்றிணைந்து பிரதேசவாசிகளின் பங்களிப்புடன் பணம் சேகரித்து வீதியைப் புனரமைத்துள்ளனர். சுமார் 100 பேர் வரையில் சிரமதானப்பணி மூலம் வீதியை அழகான முறையில் புனரமைத்ததை பலரும் பாராட்டியுள்ளனர். பெருகமலை பகுதி இளைஞர்களின் இந்த செயல் முழு நாட்டிற்குமொரு முன்மாதிரியாகும்.

பெருகமலை தாக்கிரீன் பள்ளிவாசல், குர்ஆன் மத்ரஸா நிர்வாகிகள், முச்சக்கரவண்டிச் சாரதிகள், சமூக சேவையாளர்கள் எனப் பலரும் இந்த சிரமதானப் பணியில் ஈடுபட்டு வீதியைப் புனரமைத்து அரசுக்கும் பிரதேச சபைக்கும் மாபெரும் சுமையாக இருந்த ஒரு பணியை செய்து முடித்துள்ளனர்.

# சாதாரண தரப்பரீட்சைப் பெறுபேறுகளில் வவுனியா விபுலானந்தா இரண்டாம் நிலை



(வவுனியா திவ்யா)

2022 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகள் அடிப்படையில் வவுனியா மாவட்டம் மாகாண மட்டத்தில் இரண்டாம் நிலையில் உள்ளது.


வவுனியா மாவட்டத்தில் 68 மாணவர்கள் 9 'ஏ' சித்திகளை பெற்றுள்ளனர். வவுனியா தெற்கு வலயத்தில் 56 மாணவர்களும் 9 'ஏ' சித்திகளை பெற்றநிலையில், அதில் 10 மாணவர்கள் விபுலானந்தா கல்லூரியை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது

விபுலானந்தா கல்லூரியில் 2022 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின்படி கடந்த வருடங்களை விட அதிக உயர் சித்திகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதுடன், உயர்தரம் கற்பதற்கு 96 வீத மாணவர்கள் தகுதி பெற்றுள்ளதுடன், கடந்த வருடங்களை விட விகிதாசாரத்தால் அதிகரித்துள்ளனர் என பாடசாலை அதிபர் பொன்னையா சிவநாதன் தெரிவித்துள்ளார். 2022 ஆம் ஆண்டுக்கான சாதாரணதர பரீட்சையில் வவுனியா விபுலானந்தா கல்லூரியில் தோற்றிய மாணவர்களில் சிவராசா சங்கீதன், அபிசனா அகிலன், பிரகாஷினி ஸ்ரீரங்கரட்ணம் ஜெயக்குமார் டனுஜன், யதுசா யோகராசா, ஜூலியன் யுகாஞ்சலி, கம்சிகா ராமச்சந்திரன், சதீஷ்குமார் சரணியன், ஜதுசா சயந்தன், சந்தியா ராஜ்குமார் ஆகிய 10 மாணவர்கள் 9 'ஏ' சித்திகளையும், 6 மாணவர்கள் 8 'ஏ' 'பீ' சித்திகளையும் 4 மாணவர்கள் 7 'ஏ' 2 'பீ' சித்திகளையும் பெற்று பாடசாலைக்கும் வவுனியா மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர் .

குறித்த பாடசாலையில் 2022 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்களும் நேற்று (28) திங்கட்கிழமை பாடசாலைக்கு சென்று அவர்களுக்கு கற்பித்த அதிபர், ஆசிரியர்கள் ஆகியோருக்கு நன்றி செலுத்தியதுடன், அவர்களிடம் ஆசிகளையும் பெற்றுக்கொண்டனர்.

# குறைந்த வருமானம் பெறும் 17 பேருக்கு சுயதொழில் செய்யவென புதிய கடைகள்

## நுவரெலியா பிரதேச சபையால் திறந்துவைப்பு


(நுவரெலியா மேலதிக நிருபர்)

நுவரெலியா பிரதேச சபைக்குட்பட்ட நானு-ஓயா பிரதேசத்தில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் 17 பேருக்கு சுயதொழில் செய்யவென நுவரெலியா பிரதேச சபையால் அமைக்கப்பட்ட கடைகள் நேற்று (28) காலை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டன.

மத்திய மாகாண உள்ளூராட்சி சபை மற்றும் நுவரெலியா பிரதேச சபை ஆகியவற்றால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 8 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கடைகளே இவ்வாறு திறந்து வைக்கப்பட்டன.

நுவரெலியா பிரதேச சபை தவிசாளர் வேலு யோகராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ.கமகே, முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் எஸ்.பி.ரத்நாயக்க ,மாகாண உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர் யூ.பி.ஹேரத், டப்ளியூ.பி.விஜயவர்தன உட்பட சபை உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியின் இரதல்ல குறுக்கு வீதி சந்திக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த 17 கடைகளுக்கு மத்திய மாகாண உள்ளூராட்சி சபை 4 மில்லியன் ரூபாவும், நுவரெலியா பிரதேச சபை 4 மில்லியன் ரூபாவும் என 8 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு திறந்து வைக்கப்பட்டுள்ள கடைகள் மூலம் தமது வியாபாரத்தை முன்னெடுக்கும் சுயதொழிலாளர்கள் ஊடாக நுவரெலியா பிரதேச சபைக்கும் வரியூடான வருமானம் கிடைக்கும் என நுவரெலியா பிரதேச சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹிட்லர் பற்றிக் கதைப்பதற்கு முன்னர் காற்சட்டையை சரியாக அணிவதை ரணில் தெரிந்துகொள்ள வேண்டும்

## முன்னாள் எம்.பி. கே.டி.லால்காந்த தெரிவிப்பு

(எஸ்.கணேசன்)



மக்கள் போராட்டம் இன்னும் ஓயவில்லை என்பதை ராஜபக்ஷக்கள் உள்ளிட்ட ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும் - என்று ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

கொத்மலை தேர்தல் தொகுதியின் மக்கள் சந்திப்புக் கூட்டம் கடந்த 27.11.2022 அன்று கொத்மலை–பூண்டுலோயா பகுதியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

நாட்டை விட்டோடிய பெசில் ராஜபக்ஷ அண்மையில் நாடு திரும்பினார். பலமான அரசியல் இயக்கத்தை அவர் உருவாக்கப் போவதாக சிலர் கூறித் திரிகின்றனர். விமான நிலையம் வந்த பெசிலுக்கு அவரின் சகாக்கள் மற்றும் அடியாட்களால் அரச அனுசரணையுடன் வரவேற்பளிக்கப்பட்டது.

ஆனால், தான் நாட்டைவிட்டு செல்ல முற்படுகையில் விமான நிலைய ஊழியர்கள் தன்னை எவ்வாறு கவனித்தார்கள் என்பதை பெசில் ராஜபக்ஷ மறந்துவிடக்கூடாது. மக்கள் போராட்டம் இன்னமும் ஓயவில்லை. கோரிக்கைகள் அவ்வாறே உள்ளன.

கொள்ளையர்களும் பொருளாதாரத்தை நாசமாக்கியவர்ளும் தண்டிக்கப்பட வேண்டுமெனவும் கொள்ளையடிக்கப்பட்ட வளங்கள் நாட்டுக்கு கொண்டுவரப்பட வேண்டும் எனவும் மக்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர். இதையும் பெசில் உள்ளிட்டவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதேவேளை, ஹிட்லர் பற்றிக் கதைப்பதற்கு முன்னர் காற்சட்டையை எவ்வாறு சரியாக அணிவது என்பதை ரணில் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 28.11.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 128 1113 | 14 2232 |
| கனேடியன் டொலர் | 155 04 | 167 4400 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38 1 68 | 41 0472 |
| யூரோ | 260 405 | 275 3752 |
| ஜப்பான் யென் | 1 4741 | 1 5804 |
| சிங்கப்பூர் டொலர் | 148 7727 | 16 8826 |
| ஸ்ரேலிங் பவுன் | 321 4514 | 337 8715 |
| சுவிஸ் பிரான்ங் | 265 83 7 | 284 5747 |
| ஐ.அ.டொலர் | 25 1811 | 260 1818 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 851 7 8 |
| குவைட் | குவைட் தினார் | 0,07 1464 |
| ஓமான் | ஓமான் றியால் | 831 7 71 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 015 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 5 3 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 7155 |

திகதி 27.11.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4952
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,257,330.00
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 6 2 2 8 4 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,352,529.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3194
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,763,100.00
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 07 24 47 66
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,816,610.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1407
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,671,880.00
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள் 4 1 2 1 6 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,255,762.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 982
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,070,700.00
வெற்றி இலக்கினம் V வெற்றி இலக்கங்கள் 15 31 43 57
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 134,151,021.20

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 261
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,882,080.00
இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 46 52 56 57
விசேட இலக்கினம் மேஷம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,623,940.60

கோடி 28 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1300
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,720,920.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.282,714,946.00
S 21 09 49 54 67
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

# இ.போ.ச. யாழ். சாலை பணியாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பில்






(யாழ். நிருபர்)

இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்ப்பாண சாலை பணியாளர்கள் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் வசாவிளான் பகுதியில் கடந்த புதன்கிழமை இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் மோதியதில் மாணவன் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

குறித்த விபத்து சம்பவத்தின் போது, இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சாரதி மீது அங்கிருந்த சிலர் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். அதில் காயமடைந்த சாரதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சாரதி மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஏனைய தாக்குதலாளிகளையும் பொலிஸார் கைதுசெய்ய வேண்டும் எனவும், தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கோரியே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தினுள் பஸ்களை நுழையவிடாது தடுப்புகளைப் போட்டுள்ளனர். அதனால் வெளி மாவட்ட பஸ்கள், பஸ் நிலையத்தினுள் நுழைய முடியாததால் வீதிகளில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, திடீரென பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமையால், தூர இடங்களுக்கு வேலைக்கு செல்வோர், பொதுமக்கள் எனப் பலரும் அவதிக்குள்ளானார்கள்.

# ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்சலி





(வவுனியா நிருபர்)

வவுனியா, ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள் இடம்பெற்றதுடன், மக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர்.

வவுனியா, ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லக் காணியில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள நிலையில் அதன் அருகே உள்ள நிலத்தில் நினைவு தின ஏற்பாடுகள் இடம்பெற்றிருந்தன. சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டு மாவீரர் துயிலும் இல்லம் வடிவமைக்கப்பட்டிருந்தது.

பிரதான சுடர் இரண்டு மாவீரர்களின் தாய் ஒருவரால் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், மாவீரர் நினைவு சுமந்த பாடல்களும் ஒலிக்கவிடப்பட்டிருந்தன. கலந்துகொண்ட அனைவருக்கும் மாவீரர் நினைவாக பயன்தரு மரக்கன்றுகளும் வழங்கிவைக்கப்பட்டன.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தில் நினைவேந்தல்






(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு, அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் மாவீரர் நாள் நினைவேந்தல்கள் உணர்வெழுச்சியுடன் நேற்று முன்தினம் (27) இடம்பெற்றன.

அந்தவகையில் பிரதான சுடரை மூன்று மாவீரர்களது சகோதரியான உடுப்புக்குளம் பகுதியைச் சேர்ந்த மொறிஸ் வேணன் அக்கினேஸ் என்பவர் ஏற்றினார்.

மேலும் குறிப்பாக முல்லைத்தீவு - அளம்பில் மாவீரர் துயிலுமில்லக் காணியை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ள நிலையில், மீள்குடியேற்றப்பட்ட காலத்திலிருந்து மாவீரர் துயிலுமில்ல வளாகத்திற்கு முன்பாக வீதியோரமாகவே உறவுகளால் மாவீரர்களுக்கு அஞ்சலி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், மாவீரர்களது உறவுகள், பெருந்திரளான பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் நினைவேந்தல்





(மன்னார் நிருபர்)

மாவீரர் தினத்தையொட்டி மன்னாரில் ஆட்காட்டிவெளி மற்றும் பண்டிவிருச்சானிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்க விடப்பட்டு மாவீரர் நினைவு தினம் உணர்வுபூர்வமாக நேற்று முன்தினம் (27) மாலை நினைவுகூரப்பட்டது.

தமிழர் தாயகத்திற்காக உயிர் நீத்த உறவுகளை நினைவுகூரும் வகையில் நவம்பர் மாதம் 27ஆம் திகதி மாவீரர் தினம் வருடா வருடம் நினைவுகூரப்பட்டு வருகிறது.

அதற்கமைவாக மன்னார் மாவட்ட மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் தின நிகழ்வில் தமிழ்த் தேசிய விடுதலைக்காக மூன்று மாவீரர்களை வழங்கிய தாயொருவர் நினைவுச்சுடரை ஏற்றி எழுச்சிபூர்வமாக நினைவேந்தலை ஆரம்பித்துவைத்தார் .

ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் உறவினர்கள், பெருந்திரளான மக்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், சட்டத்தரணிகள் என ஆயிரக்கணக்கானவர்கள் ஒன்றுதிரண்டு உணர்வுபூர்வமாக மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். இதன்போது மாவீரர் துயிலும் இல்லங்களில் பொலிஸார் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொடிகாமத்தில் மாவீரர் துயிலும் இல்லம் – பஸ் நிலையத்தில் அஞ்சலி





(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம் முன்பாக நேற்று முன்னதினம் (27) தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் ஈகைச்சுடரை இரண்டு மாவீரர்களின் பெற்றோர் ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் உறவுகள், பொதுமக்கள் சுடரேற்றி மலர் தூவி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இதேவேளை, கொடிகாமம் பஸ் தரிப்பிடத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

குறித்த அஞ்சலி நிகழ்வு வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன் தலைமையில் இடம்பெற்றிருந்தது.

மாவீரர்களின் உறவுகள், பொதுமக்கள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டு மாவீரர்களுக்கு விளக்கேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.



# சிறுவர்களுக்கான 'கதை கூறும் நிகழ்வு' நல்லூரில்

(சாவகச்சேரி நிருபர்)

ஐந்து தொடக்கம் பத்து வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கான 'கதை கூறும் நிகழ்வு' எதிர்வரும் 01/12/2022 அன்றைய தினம் யாழ்ப்பாணம் ரக்கா வீதி நல்லூரில் அமைந்துள்ள பிரிட்டிஷ் கவுன்சிலில் இடம்பெறவுள்ளது.

எனவே, குறித்த நிகழ்வில் கலந்துகொள்ள ஆர்வமுள்ள சிறுவர்கள் பிரிட்டிஷ் கவுன்சிலின் வலைத்தளம் ஊடாகவோ அல்லது நேரடியாக அலுவலகத்திற்குச் சென்றோ முன்பதிவுகளை மேற்கொண்டு பயனடைய முடியும்.

குறித்த நிகழ்வில் பிரிட்டிஷ் உயர் ஆணையாளர் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடமராட்சியில் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு முன்னால் அஞ்சலி




நல்லூரில்...






எள்ளக்குளத்தில்...





யாழ். பல்கலையில்...






சாட்டியில்...




கோப்பாயில்...




(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், சாட்டி, வடமராட்சி எள்ளங்குளம், கோப்பாய் ஆகிய இடங்களிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களிலும் நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவு மண்டபத்திலும் மாவீரர் நாளான நேற்று முன்தினம் (27) உணர்வெழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தாயக விடுதலைக்காக உயிர்நீத்த மாவீரர்களுக்கு சுடரேற்றி மலர் தூவி கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

வடமராட்சி எள்ளங்குளத்தில் பிரதான ஈகைச்சுடரை மேஜர் சோதியாவின் (சோதியா படையணி) தாயார் ஏற்றிவைத்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பண்டிதரின் தாயார் ஈகைச்சுடரை ஏற்றிவைத்தார். மாவீரர் நினைவுத் தூபிக்கு பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் விரிவுரையாளர்கள் மற்றும் ஊழியர்கள் தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் எனப் பெருந்திரளானோர் அஞ்சலி செலுத்தினர்.

மாவீரர் நினைவாகப் பயனுள்ள மரக்கன்றுகள் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டோருக்கு வழங்கப்பட்டன.

# நிலுவையிலுள்ள கொடுப்பனவுகளை செலுத்தாமை, கடன் அறவீடு தொடர்பில் திட்டமொன்றை பரிந்துரையுங்கள்!

## கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்கு கோப் குழு பணிப்புரை

## மறுசீரமைப்புக்கு முன்மொழிவுகளைக் கோருமாறும் அறிவிப்பு



இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் 2019ஆம் ஆண்டு நிதியாண்டு மற்றும் தற்போதைய செயலாற்றுகை குறித்து ஆராயும் நோக்கில் ரஞ்சித் பண்டார எம்.பி. தலைமையில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு கோப் குழு அண்மையில் (25) கூடியது.

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் அரச தனியார் கூட்டாண்மையின் கீழ் கூட்டுத்தாபனத்தை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றுவதற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.ஐ.ரத்னாயக்க மற்றும் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சதுரங்க உடவத்த உள்ளிட்ட அதிகாரிகளுக்கு கோப் குழு கீழ்வரும் பரிந்துரைகளை முன்வைத்தது.

1) 2016ஆம் ஆண்டு இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் இலாபமீட்டச் செய்வதற்காக கூட்டு முயற்சியாக நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானம் எடுத்தது. இருந்தபோதும் இது இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது கோப் குழுவின் அவதானமாக இருந்தது. கூடிய விரையில் இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கோப் குழு அறிவுறுத்தியது.

2) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் பிரதான நோக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்றவகையில் கூட்டுத்திட்டமொன்றை எவ்வாறு தயாரிப்பது என்பது குறித்தும் கோப் குழு சுட்டிக்காட்டியது.

3) இந்தக் கூட்டுத்திட்டத்தை செயற்படுத்த நடைமுறைச் சாத்தியமான மதிப்பீடொன்றைத் தயாரித்து அதன் அண்ணளவான திட்டத்தை 2023 ஜனவரி 03ஆம் திகதிக்கு முன்னர் கோப் குழுவில் சமர்ப்பித்தல்.

4) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் கடனாளிகளை அடையாளம் காணுதல் மற்றும் கடனை வசூலிக்கும் முறை குறித்து 3 வாரங்களுக்குள் கோப் குழுவிற்கு அறிவித்தல்.

5) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனப் பணியாளர்களின் 600 மில்லியன் ரூபா வரையிலான ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியைச் செலுத்துதல் தொடர்பில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை இரண்டு வாரங்களுக்குள் கோப் குழுவுக்கு அறிக்கையிடவும். இவ்வாறு காலதாமதப் படுத்தியமை பிழையான முன்னுதாரணமாகும் என்றும் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

6) 2018ஆம் ஆண்டுமுதல் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கைகள் மற்றும் நிதியறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டமை பற்றிய யதார்த்தமான மதிப்பீட்டை 2 வாரங்களுக்குள் கோப் குழுவிற்கு அறிவித்தல்.

7) கடற்றொழில் கூட்டுத்தாபனத்தை இலாபமீட்டும் நிறுவனமாக மறுசீரமைப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்த திட்டத்தை முன்வைத்தல்.

1957ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்துக்கு அமைய 1965ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட கடற்றொழில் கூட்டுத்தாபத்தின் செயற்பாடுகள் அதன் நோக்கங்களிலிருந்து வேறுபட்டிருப்பதாகவும் குழு சுட்டிக்காட்டியது. மீன்பிடி நடவடிக்கைகள், மீன் பதப்படுத்துதல், மீன் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆகிய பரந்த செயற்பாடுகள் குறித்து சட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தாலும் இன்று மீன் வியாபாரம் மாத்திரமே முன்னெடுக்கப்படுவதும் இங்கு புலப்பட்டது.

மீன் வியாபாரத்தை மாத்திரம் முன்னெடுப்பதற்கு அரசாங்கக் கூட்டுத்தாபனத்துக்கான தேவை இல்லையென்றும், கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை விஸ்தரித்து இலாபமீட்டும் நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் கோப் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். இதற்கமைய சட்டத்தைத் திருத்துவதற்கு அல்லது புதிய நோக்கங்களுடன் கூடிய புதிய திட்டத்துடன் முன்னோக்கிக் கொண்டுசெல்ல வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் வைத்தியசாலை உணவுகளுக்காக உள்ளூர் மீன் இனங்களை வழங்குவதற்கான தேவை இருக்கின்றபோதும், அதற்குப் பதிலாக இறக்குமதி செய்யப்பட்ட தளபத் மீனை வழங்குவது தொடர்பில் குழு கவனம் செலுத்தியது. இது தொடர்பில் ஆராய்ந்து இறக்குமதி செய்த மீன்களை வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்குப் பதிலாக உள்நாட்டு மீன் வகைகளை வழங்குவதற்கான வாய்ப்புகள் குறித்து இரண்டு வாரங்களுக்குள் அறிவிக்குமாறும் கோப் குழுவின் தலைவர், கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்குப் பணிப்புரை விடுத்தார்.

கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் பிரச்சினைகளைத் தீர்த்து சரியான பாதையில் கொண்டுசெல்வதற்கு தற்போதைய தலைவர் எடுத்துள்ள முயற்சிகளைப் பாராட்டிய கோப் குழுவின் தலைவர், இந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராயும் நோக்கில் கூட்டுத்தாபனத்தை ஜனவரி மூன்றாம் வாரத்தில் மீண்டும் அழைக்கவிருப்பதாகவும் கூறினார்.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான ஜானக வக்கம்புர, லொஹான் ரத்வத்த, இந்திக அனுருத்த, சாந்த பண்டார, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், பாட்டலி சம்பிக்க ரணவக்க, மஹிந்தானந்த அளுத்கமகே, தயாசிறி ஜயசேகர, இரான் விக்ரமரத்ன, ரோஹினி குமாரி விஜேரத்ன, சஞ்சீவ எதிரிமான்ன, ஜகத் குமார சுமித்ராராச்சி, (மேஜர்) சுதர்சன் தெனிபிட்டிய, பிரேம்நாத் சி. டொலவத்த, உபுல் மகேந்திர ராஜபக்ஷ, ராஜிகா விக்கிரமசிங்க மற்றும் மதுர விதானகே ஆகியோர் கலந்துகொண்டனர்

## 2022ஆம் ஆண்டின் சிறந்த 100 புகைப்படங்கள்: கோட்டாவின் அலுவலகப் படமும் இடம்பிடிப்பு!



பிரபல ரைம்ஸ் பத்திரிகை 2022ஆம் ஆண்டின் சிறந்த 100 புகைப்படங்களில் ஒன்றாக, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவை பதவிவிலக வலியுறுத்தி அவரது உத்தியோகபூர்வ இல்லத்திற்குள் மக்கள் நுழைந்த பின் எடுக்கப்பட்ட புகைப்படமொன்றையும் தெரிவு செய்துள்ளது.

ஜூலை 15ஆம் திகதி மக்கள் போராட்டக்காரர்கள் கோட்டாவின் உத்தியோகபூர்வ இல்லத்திற்குள் நுழைந்ததைத் தொடர்ந்து, ஜனாதிபதி தப்பியோடி தலைமறைவானார்.

அதன்பின் அவரது அலுவலகம் அலங்கோலமான நிலையில் காணப்பட்ட புகைப்படம் வைரலானது.

அந்த புகைப்படத்தையும் 2022ஆம் ஆண்டின் சிறந்த புகைப்படங்களில் ஒன்றாக ரைம்ஸ் சஞ்சிகை தெரிவுசெய்துள்ளது.

இந்த 100 புகைப்படங்களை ரைம்ஸ் இதழின் 8 போட்டோ எடிட்டர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். இந்த ஆண்டு பல்வேறு நிகழ்வுகள் நிறைந்த ஆண்டாக உள்ளது என்பதைக் காட்டவே இந்த 100 புகைப்படங்களை தேர்ந்தெடுத்ததன் நோக்கம் என ரைம்ஸ் இதழ் தெரிவித்துள்ளது.

## தாக்கப்பட்ட காயங்களுடன் பெண்ணொருவரின் சடலம் மீட்பு

**மஹாவெல பொலிஸ் விசாரணை**

மஹாவெல, மானின்கமுவ பிரதேசத்தில் பெண்ணொருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் வீட்டிலிருந்து காணாமல்போயுள்ளதாக மஹவெல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டதையடுத்து வீட்டைச் சோதனயிட்டபோதே பெண்ணின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட பெண் பல்லேபொல, மானின்கமுவ பிரதேசத்தில் வசித்த 55 வயதுடையவராவார்.

சடலம் தொடர்பில் நீதிவான் விசாரணைகள் இடம்பெற்றபோது, தலையில் கூரிய ஆயுதத்தால் தாக்கிய காயங்கள் காணப்பட்டமையால் இது கொலைச் சம்பவம் என தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் தனது சகோதரன் வீட்டில் வசித்துவந்த திருமணமாகாத பெண்ணாவார். சடலம் மாத்தளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

சந்தேக நபர்களைக் கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளை மஹாவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



புதிதாக நியமிக்கப்பட்ட இலங்கைக்கான ஓமானியத் தூதுவர் அஹமட் அலி ஸைத் அல் ரஷ்டி அண்மையில் (25) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நாடாளுமன்றத்தில் சந்தித்தார். இரு நாடுகளுக்குமிடையில் காணப்படும் இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதன் அவசியம் குறித்து கருத்துத் தெரிவித்த ஓமான் தூதுவர், இலங்கை - ஓமான் நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தை புதுப்பிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் கவனம் செலுத்தினார்.



மாத்தறை ஸாதுலியா ஸாவியாவில் ஸலவாத் மஜ்லிஸ், கஹடோவிட்ட முஅஸ்கர் ரஹ்மான் அரபுக் கல்லூரியின் பணிப்பாளர் மௌலவி முகத்தமுஷ்ஷாதுலி முஹம்மத் இக்ராம் (பாஸி) தலைமையில் இடம் பெற்றது. மீரா எகடமி குர்ஆன் மத்ரஸா சிறார்களும் மஜ்லிஸில் பங்குபற்றினர். (படம்-பேருவளை பீ.எம்.முக்தார்)

## லொறிச் சாரதியிடம் 12,000 ரூபா இலஞ்சம்

**4 பொலிஸார் பணி இடைநிறுத்தம்**

லொறிச் சாரதி ஒருவரிடம் 12,000 ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கந்தகெட்டிய பொலிஸ் நிலையத்தில் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் மூன்று கான்ஸ்டபிள்கள் நேற்றுமுன்தினம் (27) முதல் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி கந்தகெட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவந்தன பிரதேசத்தில் லொறியொன்றை நிறுத்தி அதன் குறைபாடுகள் தொடர்பில் சட்டநடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காக 12,000 ரூபாவை இவர்கள் இலஞ்சமாகப் பெற்றுள்ளனர். இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், பதுளை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டி.எம்.ஜயரத்ன இவர்களை பணியிலிருந்து இடைநிறுத்தியுள்ளார்.



பேருவளை, மருதானை மொரக்கல்ல இடைப்பட்ட பகுதியில் கடலரிப்பு உக்கிர நிலையை அடைந்துள்ளது. உல்லாச ஹோட்டலொன்றின் பின் பகுதி பாரிய கடலரிப்புக்கு உள்ளாகியிருப்பதை படங்களில் காணலாம். (படங்கள்- பேருவளை பீ.எம்.முக்தார்)





### Team Leader

@rs qs-to AON bnl o mx a rdc hmRqhK mj -

Jdx Qdr onmr hahkhshdr

- Odqend b kkbdmsdq@f dms ct shdr & odqend du kt shnmnej mnv kdcf d
- Qdonr shmf mc at cf dshmf
- Jmnv kdcf d hmL R Neehbd mc b kkbdmsdqr nesv qd
- Fnnc bnl l t mhb shnmrj hkkr hmDmf khrg mc Rhmg k . S l hk
- L m f d mc f t hcd b kk bdmsdq f dmsr enq deehbhdmbx

B mchc sd Oqnehkd

- 1 xd qr b kkbdmsdq dwodqhdmbd
- Glf g r bgnnk chokn l nqdpt hu kdms

R k qx mdf nsh akd, v nqj hmf gnt qr v hkk chedq a rdc nmsgd bkhdms qdpt hqdl dms-
Hmsdqdrsdc b mchc sdr b m ookx ax rdmchmf sgdhq BUr sn qdbqt hsl dmsabnmmdbsdc f l hkbnl
Bnms bstr nm+83 665 260 023
+83 666217 012-
ABnmmdbsdc (Ous) Ksc-
Mn9/6, Rj dksnmF qcdmr,
Bnknl an /4-

### Assistant Showroom Manager

@v dkkqdot sdc bnl o mx hmunkudc hme hqsq cd-

Jdx Qdpt hqdl dmsr-

- @r rhrs sgd r gnv qnnl l m f dq hmok mmhmf mc hi okdl dmshmf r sq sdf hdr sn ssq bs bt r snl dqr
- Bnnqchm sd c hkx bt r snl dqr dqulhbd nodq shnmr
- Sq bj sgd oqnf qdr r mc mmt knaidbshudr
- L nmhsnq mc l hms hmr snqd hmudmsnqx
- Du kt sd dl oknxdd odqend mbd mc hcdmshex ghqhmf mc sq hmhmf mddcr

B mchc sd oqnehkd

- 1 xd qr' dwodqhdmbd hmbt r snl dqr dqulhbd
- Ekt dms hmDmf khr g mc Rhmg k . S l hk

@ssq bshud qdl t mdq shnmv hkk ad oqnuhcdc enq rdkdbsdc b mchc sd-

Hmsdqdrsdc b mchc sdr b m ookx ax rdmchmf sgdhq BUr sn qdbqt hsl dmsabnmmdbsdc f l hkbnl
Bnms bstr nm+83 665 260 023
+83 666217 012-
ABnmmdbsdc (Ous) Ksc-
Mn9/6, Rj dksnmF qcdmr,
Bnknl an /4-
l t mhnqDwdbt shud . RdmhnqDwdbt shud
Bnl o mx9F dnqf d Rsdt qs
@ookx9b qddq f dnqf dr sdt qs-kj

### Management Trainee

Bnl o mx9Nq mf d Dkdbsqhb
Dct b shnm kPt khehb shnm9Cdf qdd
@f d Kh hs9Adknv 14
@ookx9b qddq nqdkbnqp-bnl

### Laboratory Technologist (03 Positions)

Hmr shst shnm9HNL - TmL hf q shnm
Ct sx Rs shnm9Bnknl an
@ookx9gssor 9 . rqhk mj -hnl -hms. b qddq
Onr s ne Rt qudxnq
Hmr shst shnm9RqhK mj onqsr @t sgnqhsx
Pt khehb shnmr 9Cdf qdd neQdf hrsdqdc Kbdmr dc Rt qudxnqeqnl qdbnf mhydc oqnedr r hnm k hmr shst shnm hmsgd qdkdu ms ehdkc-
@f d Kh hs9Adknv 34 xd qr
@ookx9
Sgd BghdeGt l mQdr nt qbd L m f dq
Gt l mQdr nt qbd Chuhr hnm
Jnbgbghj cd, Bnknl an 02-
r ko gqdw r ko -kj

### Consumer coordinating Officer

V nqj Ok bd9J hqha sgf nc
@f d Kh hs91/-24
@ookx9sgt r ghsg l c f l hkbnl
/65 3335757

# வெலி-ஓயா நீர்ப்பாசனத் திட்டக்காணிகள் அபகரிப்பு - நீரூற்றுகளுக்கு பாதிப்பு

(பலாங்கொடை மேலதிக நிருபர்)

பலாங்கொடை வெலி-ஓயா நீர்ப்பாசனத் திட்டத்திற்கு நீரை வழங்கும் வெலி-ஓயா ஆற்றின் மேற்பகுதியில் உள்ள காடுகள் பலரால் பெருமளவில் அழிக்கப்பட்டு வருவதுடன் அபகரிக்கப்பட்டு வருவதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் போகபெலஸ்ஸபோ, கஹபிட்டிய ஆகிய பிரதேசங்களில் உள்ள வளமான 50 முதல் 1000 ஏக்கர் வரையிலான காணிகள் இவ்வாறு அபகரிக்கப்பட்டு வருவதாகவும் விவசாயம் செய்கின்ற போர்வையில் இவை அழிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையால் வெலிஓயா ஆற்றின் நீர் வளம் குன்றி வருவதுடன், பிரதேசத்தின் நீர் வளமும் குன்றி வருவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். எனவே, இவ்வாறு சட்டவிரோதமாக செயல்படும் தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்களும் சமூக ஆர்வலர்களும் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

# சகவாழ்வுக்கான இளைஞர் சஞ்சிகை வெளியீடு





(கண்டி நிருபர்)

சகவாழ்வுக்கான இளைஞர் சஞ்சிகையின் 2ஆம் இதழ் அண்மையில் (27) ரஜவெல இந்து தேசிய பாடசாலை மண்டபத்தில் வெளியிடப்பட்டது. 'பாலம்' என்ற குறித்த சஞ்சிகையின் முதல் பிரதியை 'சைல்ட் கெயார் பார்த் லங்கா' நிறுவனத்தின் பணிப்பாளர் காமினி ரத்னதிஸ்ஸ மாணவி எம்.தர்சிகாவிற்கு வழங்கினார்.

சமயக் கல்வி நிறுவனங்களின் சகவாழ்வுக்கான இளைஞர் பங்கேற்புத் திட்டத்தின் கீழ் பல்வேறு செயற்பாடுகள் இளைஞர், யுவதிகளுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் சமயப் பாடசாலைகளில் கல்வி பயிலும் இளவயதினரிடையே சகவாழ்வு மற்றும் சமூக ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் தொடர் செயலமர்வுகளை 'சைல்ட் கெயார் பார்த் லங்கா' அமைப்பு நடத்தி வருகிறது. அறநெறிப் பாடசாலைகள், மத்ரசா கல்வி நிறுவனங்கள், ஞாயிறு கிறிஸ்தவ பாடசாலைகள், பௌத்த தஹம் பாடசாலைகள் போன்றவற்றின் மாணவ, மாணவிகள் இதில் பங்குகொள்கின்றனர். கண்டி மாவட்டத்தில் பாத்ததும்பறை, பூஜாப்பிட்டிய, குண்டசாலை, மெததும்பறை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள மத்திய நிலையங்களில் வார இறுதி நாட்களில் பல்வேறு தலைமைத்துவப் பயிற்சிகளையும் நல்லிணக்க ஊக்குவிப்பு செயற்பாடுகளையும் வழங்கி வருகிறது. மேலும் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் ஆக்கங்களை உருவாக்கி சஞ்சிகைகளாகவும் வெளியிட்டு வருகிறது. மேற்படி செயற்பாட்டின் இரண்டாம் இதழே அண்மையில் (27) வத்துகாமம் கல்வி வலயத்திலுள்ள ரஜவல இந்து தேசிய பாடசாலை மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் ரஜவெல இந்து தேசிய பாடசாலையின் ஆசிரியர்களான கௌரி சங்கர், எம்.சுதர்ஷன், நவனகல தமிழ் வித்தியாலய அதிபர் எஸ்.ஸ்ரீதரன் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# இலங்கையை பொறிக்குள் சிக்க வைக்க இந்தியா - மேற்குலகம் முயற்சி

## விமல் வீரவங்ச தெரிவிப்பு








(எஸ்.கணேசன்)

இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் அதனை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு தமது பொறிக்குள் இலங்கையை சிக்க வைப்பதற்கு இந்தியாவும், மேற்குலகமும் முயற்சிக்கின்றன என்று உத்தர லங்கா சபாகயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவங்ச தெரிவித்தார்.

உத்தர லங்கா சபாகயவின் நுவரெலியா மாவட்ட மக்கள் சந்திப்பு ஹங்குராங்கெத்தையில் நேற்று முன்தினம் (27) நடைபெற்றது. நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸ தலைமையில் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு விமல் வீரவங்ச உரையாற்றுகையில்,

"இலங்கை பொருளாதார ரீதியில் பலமிழந்துள்ளது. இதனை வைத்து பலம்பொருந்திய நாடுகள் இலங்கையின் கழுத்தை இறுக்கிப் பிடிக்க முற்படுகின்றன. தமது உபாயத்துக்குள் இலங்கையை கொண்டுவருவதற்கு கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டுவருகின்றன. தமது நாட்டு ரூபாவை இலங்கையில் செயற்படுத்துவதற்கு இந்தியா முயற்சிக்கின்றது. அவ்வாறு நடந்தால் இலங்கை இந்தியாவின் மாநிலமாக மாறக்கூடிய சூழ்நிலை தானாகவே உருவாகிவிடும். மறுபுறம் நாட்டில் போராட்டங்களை தூண்டிவிட்டு, அராஜக நிலைமையொன்றை உருவாக்குவதற்கு மேற்குலக நாடுகள் திட்டம் தீட்டுகின்றன. ஹெட்டியைபோன்று இலங்கையிலும் ஆட்சிக் கட்டமைப்பு இல்லாத நிலைமையை தோற்றுவித்து, நாட்டை சீரழிக்க முற்படுகின்றன. இதற்காக அரச சார்பற்ற நிறுவனங்கள் தூண்டிவிடப்படுகின்றன. ஆசிரியர்களுக்கான ஆடையில் மாற்றம் வேண்டும் எனக் கூறுவது இந்த நிகழ்ச்சி நிரலின் ஓர் அங்கமாகும்" - என்றார்.

# மொனராகலை மாணவர் 9 ஏ சித்தி பெற்று முதலிடம்



(பதுளை நிருபர்)

மொனராகலை மாவட்டத்தில் முதன் முறையாக 9 ஏ சித்தி பெற்று மலையக மாணவர் ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மொனராகலை கல்வி வலயத்தின் விபுலானந்தா தேசியக் கல்லூரி மாணவரான யோகேஸ்வரன் திவான் என்பவரே ஒன்பது பாடங்களிலும் 9 ஏ தரத்தில் சித்தியடைந்துள்ளார். இம்மாவட்டத்தின் வரலாற்றில் 9 ஏ தர சித்திகளைப் பெற்ற முதல் மாணவன் இவரேயாவார். இம்மாணவரை அதிபர், பாடசாலை சமூகம், பெற்றோர் உட்பட பலரும் பாராட்டியுள்ளனர்.










பதுளை மற்றும் மொனராகலை மாவட்ட தமிழ் மொழி மூல பாடசாலை அதிபர்களையும், மாகாண வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் சந்திப்பதற்கான விசேட கூட்டம் பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரி பிரதான மண்டபத்தில், கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் தலைமையில், நேற்று முன்தினம் (27) நடைபெற்றது. இதன்போது தமிழ் மொழி மூல பாடசாலைகளின் குறைநிறைகள் மற்றும் கல்வி வளர்ச்சியை வலுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அதிபர் மற்றும் கல்வியாளர்களையும் கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார், கல்லூரி அதிபர் கே. திருலோகசந்தர் ஆகியோர் உரையாற்றுவதையும் பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (பதுளை நிருபர்)

# கிழக்கு மாகாணத்தில் மாவீரர் தினம் அனுஷ்டிப்பு







அம்பாறை மாவட்டம்







திருகோணமலை

(மட்டக்களப்பு, அம்பாறை, கல்லடி நிருபர்கள்)


அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பிரதேசத்திற்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்திலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவடிமுன்மாரி, தரவை, வாகரை, கண்டலடி ஆகிய மாவீரர் துயிலும் இல்லங்களிலும் தாண்டியடி சந்தியில் அமைக்கப்பட்டுள்ள பிரத்தியேக பகுதியிலும் வணக்க நிகழ்வுகள் இடம்பெற்றதோடு, திருகோணமலையில் ஆழங்குளம் மாவீரர் துயிலுமில்லத்திலும் நேற்று முன்தினம் (27) மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.


இதன்போது தீபச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு உணர்வு ரீதியாக அஞ்சலி செலுத்தினர். மேலும் அங்கு கலந்து கொண்டவர்களுக்கு தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன.

நேற்று முன்தினம் மாலை 6.05 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வு ஒரு நிமிட மௌன வணக்கத்தை அடுத்து பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

# பல்கலைக்கழக விடுதியின் கழிவுநீர் வீதியில்; கண்டுகொள்ளாத சம்மாந்துறை பிரதேச சபை!





(ஐ.எல்.எம்.நாஸிம்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சம்மாந்துறையில் அமைந்துள்ள பிரயோக விஞ்ஞான பீடத்தின் பெண்கள் விடுதி பகுதியிலிருந்து துர்வாடையுடன் கூடிய கழிவுநீர் கசிந்து பின்புறமாகவுள்ள வீதியெங்கும் பரவிக் கிடக்கின்றது.

பல்கலைக்கழகத்துக்கு அருகில் செல்லும் குறித்த வீதியை மக்கள் பாவிக்கமுடியாத அளவுக்கு கழிவுநீர் தேங்கிக் கிடக்கின்றது. இதேவேளை, இந்த வீதியை அண்மித்த பகுதியில் மக்கள் நெருக்கமாகவும் வசிக்கின்றனர்.

குறித்த வீதி வைத்தியசாலை, பாடசாலை, பள்ளிவாசல் மற்றும் மதரஸா போன்றவற்றுக்குச் செல்லும் முக்கிய வீதியாகும். இதனால் பிரதேசவாசிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

கசிந்து கிடக்கும் கழிவுநீர் உடனடியாக அகற்றப்பட்டு இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும்.

சம்மாந்துறை பிரதேச சபை, சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், பொலிஸ் நிலையம், பல்கலைக்கழக நிர்வாகம் அல்லலுறும் மக்களின் இந்தப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வைப் பெற்றுக்கொடுக்குமாறு பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# காதலனை திட்டியதால் காதலி தற்கொலை

(அப்துல்சலாம் யாசீம்)

காதலனை வீட்டார் திட்டியதால் காதலி தூக்கில் தொங்கி தற்கொலை செய்துகொண்ட சம்பவமொன்று திருகோணமலையில் பதிவாகியுள்ளது.

திருகோணமலை, உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் இரவு (27) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காதலித்து வந்த இளைஞன் சரியில்லை என தாயார் தனது மகளுக்கு புத்திமதி கூறியதையடுத்து, இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்த யுவதி அலத்தோட்டம் - ஆனந்த விநாயகர் வீதியில் வசித்துவரும் சிவக்குமார் கீர்த்தனா (18 வயது) எனவும் தெரியவருகின்றது.

தூக்கில் தொங்கிய நிலையில் கிடந்த யுவதியை திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டுசென்றதுடன், அவர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டதாக வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

குறித்த மரணம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று முடிவடைந்த பின்னர் உறவினர்களிடம் சடலத்தை ஒப்படைக்க உள்ளதாகவும், விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# மருதமுனை ஆயுர்வேத மத்திய மருந்தகம் யுனானி வைத்தியசாலையாகத் தரமுயர்வு






(மருதமுனை நிருபர்)

பெரியநீலாவணை மருதமுனை ஆயுர்வேத மத்திய மருந்தகம், பிரதேச கிராமிய ஆயுர்வேத, யுனானி வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு கடந்த 2022-11-21ஆம் திகதி வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி யூ.எல்.எம்.கியாஸ் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதிகளாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றக்கீப் ஆகியோர் கலந்துகொண்டு தரமுயர்த்தப்பட்ட வைத்தியசாலையின் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்துவைத்தனர்.

அதிதிகளாக கல்முனை பிராந்திய பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளர் டொக்டர் எம்.பி.எம்.வாஜித், டொக்டர் எம்.சி.எம்.மாஹிர், ஆயுர்வேத இணைப்பாளர் டொக்டர் எம்.ஏ.நபீல் ஆகியோருடன் வைத்திய அதிகாரிகளும், வைத்தியசாலை வைத்தியர்களும் வைத்தியசாலை உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். இங்கு பிரதம அதிதிகள் மற்றும் அதிதிகளால் மருந்து தயாரிக்கும் நிலையம் திறந்துவைக்கப்பட்டதுடன், மூலிகைத் தோட்டத்தையும் பார்வையிட்டனர்.

இந்த வைத்தியசாலை 2007ஆம் ஆண்டு அப்போது கிழக்கு மாகாண சபை உறுப்பினராக இருந்த எல்.எல்.துல்கர் நயீம் துல்சானின் முயற்சியினால் கொண்டுவரப்பட்டு அப்போது முதலமைச்சராக இருந்த சிவநேசதுரை சந்திரகாந்தனால் மருதமுனையில் பல்தேவைக் கட்டடம் ஒன்றில் திறந்துவைக்கப்பட்டது. பின்னர் 2017ஆம் ஆண்டு பெரியநீலாவணையில் புதிய கட்டடம் அமைக்கப்பட்டது.

இந்த வைத்தியசாலைக்கு நீலாவணை, பெரியநீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு. துரவந்தியமேடு, நற்பிட்டிமுனை ஆகிய கிராமங்களிலிருந்து தினமும் ஐம்பதிற்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சைக்கு வருகின்றனர்.

இங்கு வெளிநோயாளர் பிரிவு இயங்குவதுடன், ஆண்களுக்கும், பெண்களுக்கும் தங்கி சிகிச்சை பெறுவதற்கான தனித்தனி விடுதி வசதிகள் உள்ளன. மேலும் மூலிகைத் தோட்டம் ஒன்றும் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றமை முக்கிய அம்சமாகும். அத்துடன், மருந்து தயாரிக்கும் நிலையமும் இயங்கிவருகின்றது.

# சாய்ந்தமருதில் வர்த்தக சந்தையும் விற்பனைக் கண்காட்சியும் - 2022

(பொலிவேரியன் நிருபர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ்வர்த்தக சந்தையானது, நாளை புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை சாய்ந்தமருது பொலிவேரியின் பல்தேவைக் கட்டட வளாகத்தில் நடைபெறவுள்ளது.

சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தொழில் முயற்சியாளர்களினது வியாபாரத்தை முன்னேற்றவும், பிரபல்யம் அடையச்செய்யும் வகையிலும் பல நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்தவகையில், இவ்வர்த்தக சந்தையில் சாய்ந்தமருது தொழில்முயற்சியாளர்களது பொருட்களின் விற்பனையும் கண்காட்சியும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில், தொழில் முயற்சியாளர்களது முன்னேற்றத்திற்கு பொதுமக்களும் கலந்துகொண்டு சிறப்பித்து, பங்களிப்புச் செய்யமுடியும் என்பதால் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைத்து பொதுமக்களுக்கும் திறந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# காணாமல்போன வாழைச்சேனை மீனவர்கள் 64 நாட்களின் பின் அந்தமான் தீவில் கண்டுபிடிப்பு

(மீராவோடை நிருபர்)

கடந்த செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதி ஆழ்கடலுக்குச் சென்று காணாமல்போன வாழைச்சேனை பகுதியைச் சேர்ந்த நான்கு மீனவர்களும் அந்தமான் தீவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

காணாமல்போன மீனவர்கள் தொடர்பான தகவல் 64 நாட்களின் பின்னர் நேற்று முன்தினம் (27) மாலை 4.30 மணியளவில் கிடைத்துள்ளதாக மீனவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

அந்தமான் தீவிலிருந்த தமது தொலைபேசிக்கு அழைப்பொன்று வந்ததாகவும் அதில் மீனவர்கள் படகுடன் மீட்கப்பட்டு, தற்போது கடல் பாதுகாப்புப் படையின் பாதுகாப்பில் இருப்பதாகவும் தமக்கு தகவல் கிடைத்ததாக காணாமல்போன மீனவர் உமர்தீன் அசன் அலி என்பவரின் மகன் முஜாஹித் கூறினார்.

குறித்த தகவல் தொடர்பில் மீனவர் சங்கம் மற்றும் துறைமுக அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாகவும் முஜாஹித் மேலும் தெரிவித்தார்.

# திருமலை மாவட்டத்தில் மேலும் மூன்று புதிய பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட வேண்டும்

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. வலியுறுத்து

(கிண்ணியா நிருபர்)



திருகோணமலை மாவட்டத்தில் மேலும் மூன்று புதிய பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட வேண்டும் எனவும் உப பிரதேச செயலகமாக இயங்கிவரும் தோப்பூர் உப பிரதேச செயலகத்தை பிரதேச செயலகமாக தரமுயர்த்துவதுடன், கிண்ணியா பிரதேச செயலக பிரிவில் கிண்ணியா பிரதேச சபையை உள்ளடக்கிய பகுதியை தனியான பிரதேச செயலக பிரிவாகவும், திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச சபை பகுதியில் ஒரு பிரதேச செயலகப் பிரிவும் புதிதாக உருவாக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

மேலும், திருகோணமலை மாவட்டத்தில் 11 பிரதேச செயலகப் பிரிவுகளும், தோப்பூர் உப பிரதேச செயலகப் பிரிவும் காணப்படுகின்றது.

1975ஆம் ஆண்டுக்கு முன்னர் 11 கிராமசேவகர் பிரிவுகளைக்கொண்ட கொட்டியாரப்பற்று பிரதேச செயலகம் காணப்பட்டது. அதிலிருந்து தெஹிவத்தை மற்றும் சேருவில கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கி சிங்கள மக்களுக்காக சேருவில பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டு, ஏனைய 9 கிராம சேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கி மூதூர் பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் 1998ஆம் ஆண்டு மூதூர் பிரதேச செயலகப் பிரிவிலிருந்து ஈச்சிலம்பற்று கிராமசேவகர் பிரிவை மாத்திரம் பிரித்து தமிழ் மக்களுக்காக வெருகல் பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டது.

ஆனால், 1975ஆம் ஆண்டுக்கு முன்னர் 11 கிராமசேவகர் பிரிவாக இருந்த பகுதியிலிருந்து வெறும் 03 கிராமசேவகர் பிரிவுகளை பிரித்து இரண்டு பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன, ஏனைய 08 கிராம சேவகர் பிரிவுக்கு ஒரு பிரதேச செயலகம் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது, தற்பொழுது மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் 42 கிராம சேவகர் பிரிவுகள் காணப்படுகின்றன.

தோப்பூருக்கு தனியான பிரதேச செயலகம் வேண்டும் என்ற கோரிக்கை எனது தந்தை காலம்சென்ற எம்.ஈ.எச்.மஹ்ரூப் இராஜாங்க அமைச்சராக இருந்த காலத்தில் 1989ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

2007ஆம் ஆண்டுமுதல் 12 கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கி தோப்பூர் உப பிரதேச செயலகமாக இயங்கிவருகின்றது. நாட்டில் புதிய பிரதேச செயலகங்களை உருவாக்குவதற்காக இதுவரை ஐந்து எல்லை நிர்ணய ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை அனைத்திலும் தோப்பூர் தனி பிரதேச செயலகத்திற்கான கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

தோப்பூர் உப பிரதேச செயலகம் உருவாக்கப் பட்ட பின்னர் நாட்டில் இரண்டு முறை புதிய பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதில் தோப்பூர் உள்ளடக்கப்படவில்லை என்பதனை வேதனையுடன் இச்சபையில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இதற்கு பின்னர் உருவாக்கப்பட்ட பல பிரதேசங்கள் தனி பிரதேச செயலகங்களாக மாறியுள்ளன என்பதனையும் இங்கே பதிவுசெய்ய விரும்புகின்றேன் - என்றார்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின்படி கிழக்கில் மட்டக்களப்பு கல்வி வலயம் முதலாமிடம்

(மட்டக்களப்பு நிருபர்)

தற்போது வெளியாகியுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின்படி கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு கல்வி வலயம் முதலாமிடத்தைப் பெற்றுள்ளதாக மாகாண கல்விப் பணிப்பாளர் நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார்.

வெளியாகிய பொறுபேற்றின் அடிப்படையில் மாகாண கல்வித் திணைக்களத்தினால் வலய ரீதியாக மேற்கொள்ளப்பட்ட தரப்படுத்தலின் பிரகாரம் கிழக்கு மாகாணத்திலுள்ள 17 கல்வி வலயங்களிலும் மட்டக்களப்பு கல்வி வலயம் முதலாமிடத்தைப் பெற்றுள்ளது.

இதனடிப்படையில் அவ்வலயத்தில் மொத்தமாக பரீட்சைக்குத் தோற்றிய 2,056 மாணவர்களில் 1,789 பேர் உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளதுடன், இதனுள் 128 மாணவர்கள் 9ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர். மாறாக, குறைந்தளவிலான 7 மாணவர்களே எவ்வித பாடத்திலும் சித்தியடையவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். எனவே, குறித்த சாதனையை நிலை நாட்டுவதற்கு அயராது உழைத்த வலயக்கல்விப் பணிப்பாளர், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் பாராட்டுகளை தெரிவித்துக்கொள்வதாக மாகாண கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# கல்முனை இஸ்லாமாபாத் மாணவன் சாதனை

(எம்.என்.எம்.அப்ராஸ்)



கல்முனை வலயக்கல்விப் பிரிவிலுள்ள கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்திலிருந்து கடந்த 2021ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகிய நிலையில், என்.எம்.நப்றத் என்ற மாணவன் 9ஏ சித்திகளைப் பெற்று பாடசாலை வரலாற்றில் சாதனை படைத்துள்ளார்.

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தில் கடந்த வருடம் (2021) முதன்முதலாக க.பொ.த. சாதாரண தரப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதுடன், அண்மையில் க.பொ.த. சாதாரண தரப் பெறுபேறுகள் வெளியாகிய நிலையில், மாணவன் என்.எம்.நப்றத் அனைத்து பாடங்களில் 9ஏ சித்தி பெற்று பாடசாலை வரலாற்றில் முதன்முறையாக வரலாற்றுச் சாதனை படைத்துள்ளதோடு, மற்றுமொரு மாணவி எஸ்.எச்.பாத்திமா ஹிறா 7ஏ, 2பி என்ற சித்தியைப் பெற்றதுடன், அதிகமான மாணவர்கள் திறமைமிக்க சித்திகளையும் பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் ஏ.ஜி.எம்.றிசாத் தெரிவித்தார்.

மேலும், கல்முனை வலயகல்வி அலுவலக பாடசாலைகளின் க.பொ.த. சாதரண தரப் பெறுபேறுகளின் வலய தரப்படுத்தலின்படி நான்காவது இடத்தில் குறித்த கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், பாடசாலையில் முதன்முதலாக க.பொ.த. சாதரண தரப் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட நிலையில் (2021) குறித்த வலயமட்ட பாடசாலைகள் தரப்படுத்தலில் நான்காவது இடத்தைப் பெற்றுள்ளமை சிறப்பம்சமாகும்.

# தென்கிழக்குப் பல்கலையில் முப்பெரும் விழா







(மாளிகைக்காடு நிருபர்)

மூன்றாவது ஆண்டை சிறப்பிக்குமுகமாக ஆர்.ஜே. வலையமைப்பின் ஏற்பாட்டில் வலையமைப்பின் தலைவர் ஏ.முஹம்மட் இன்ஸாப் தலைமையில் இடம்பெற்ற "முப்பெரும்விழா- 2022" நிகழ்வு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்பப் பீடத்தின் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை (26) இடம்பெற்றது.


ஆர்.ஜே. வலையமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், ஊடகம், சமூக சேவை உட்பட பல்வேறு துறைசார் பிரமுகர்களும் இந்நிகழ்வில் சேவைநலன் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வின் பிரதம அதிதிகளாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம்.பாஸில், சம்மாந்துறை பிராந்திய நீர்ப்பாசனப் பொறியியலாளர் எம்.எஸ்.எம்.நவாஸ் ஆகியோர் கலந்துகொண்டதுடன், கௌரவ அதிதியாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிரதிப் பணிப்பாளர் வஸீர் அப்துல் ஹையூம் கலந்துகொண்டார்.

மேலும், சம்மாந்துறை உலமா சபைத் தலைவர், செயலாளர், பள்ளிவாசல் பிரதம நம்பிக்கையாளர், சிலோன் மீடியா போரம், முஸ்லிம் மீடியா போரம் போன்ற ஊடக அமைப்புகளின் முக்கிய பிரதானிகள், ஊடகவியலாளர்கள், பாடசாலை அதிபர்கள், முஸ்லிம் பெண்கள் அமைப்பு, அல்-மீஸான் பௌண்டஷன், ஸ்ரீலங்கா போன்ற சிவில் அமைப்புகளின் பிரதானிகள், வெற்றிபெற்ற போட்டியாளர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் சமூக மேம்பாட்டில் ஊடகங்களின் பங்களிப்புகள், பல்கலைக்கழகங்களுக்கும் பொதுமக்களுக்கும் உள்ள தொடர்புகள், நாட்டில் தலைதூக்கியுள்ள போதைப்பொருள் பாவனை தடுப்பு தொடர்பில் நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்துகொண்டிருந்த இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம்.பாஸில் உரை நிகழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மூதூரில் பிரதேச சபை எல்லை நிர்ணயம் குறித்து சமூக மட்ட விழிப்புணர்வு கலந்துரையாடல்





(கந்தளாய் நிருபர்)

பிரதேச சபை எல்லை நிர்ணயம் தொடர்பில் நாடளாவிய ரீதியாக நடைமுறைப்படுத்தப்படும் எல்லை நிர்ணய முன்மொழிவுத் தொடர்பிலான சமூக மட்ட விழிப்புணர்வு கலந்துரையாடல் நேற்று முன்தினம் (27) மூதூர் பிரதேச சபை ஒன்றுகூடல் மண்டபத்தில் ஓய்வுநிலை இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர் எம்.சீ.எம்.ஷெரீப் தலைமையில் ஒழுங்கு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்கள், சமூக மட்ட பிரதிநிதிகள், புத்திஜீவிகள், அரசியல் பிரமுகர்கள், உலமாக்கள் மற்றும் பொதுமக்கள் என்று பலரும் கலந்து சிறப்பித்ததோடு, பின்வரும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன.

எல்லை நிர்ணய அடிப்படையிலான பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுதல், மேலதிக பிரதிநிதிகள் நீக்கப்படும், பழைய முறைப்படியான பிரதிநிதித்துவம் வழங்குதல், பிரதேச சபையை நகர சபையாக உயர்த்தி இரண்டு பிரதேச சபைகளை சம்பூர், தோப்பூர் பிரதேச சபைகளாக முன்மொழிவு செய்தல், மூதூர் பிரதேச எல்லையில் தமிழ், முஸ்லிம் மக்கள் பிரதேச ரீதியாக பிரிந்துள்ள நிலையில், இரண்டு முன்மொழிவுகளை தமிழ், முஸ்லிம்கள் சார்ந்து முன்வைத்தல், எல்லோரும் சேர்ந்து ஒரு முன்மொழிவை பரிந்துரை செய்வதற்கான ஒழுங்குசெய்தல், மாவட்டத்திற்கான வாக்காளர் எண்ணிக்கையில் சதவீத பிரதிநிதித்துவத்தை உருவாக்குதல், மூதூர் பகுதிக்கான பிரதிநிதித்துவத்தை இனவிகிதாசார அடிப்படையில் வகைப்படுத்தல், பிரதேச சபை உருவாக்கத்தில் அதற்கான எல்லை நிர்ணயத்தையும் வரையறை செய்தல், தற்போதுள்ள வட்டாரங்களில் எண்ணிக்கைகளை உயர்த்துதல், தொழிற்துறை சார்ந்து எல்லை நிர்ணயம் ஒழுங்கு செய்யப்படவேண்டும், கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற ஏனைய முஸ்லிம் பிரதேச முன்மொழிவுகளை ஆய்வுசெய்தல், SEUGA Mutur நிறுவனம் ஊடாக குறித்த முன்மொழிவை வரைப்பு செய்வதற்கான அனுமதி அளிக்கவேண்டும், நகர சபை உருவாக்கத்தில் திண்மக்கழிவு அகற்றுதல் தொடர்பாகவும், ஆளணி மற்றும் காணி பரப்பு தொடர்பில் ஆராய்தல்.

இறுதியாக SEUGA Mutur நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன் ஒரு குழு உருவாக்கப்பட்டு, குறித்த முன்மொழிவுத் திட்டம் வரைபு செய்வதாக தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

## போடியார் புலம்பல்!



**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்திருக்கிற முடிவ வீணை கட்சி அமைச்சர் டக்ளஸ் அம்மாச்சி வரவேற்றிருக்காரு எலுவா?**

**அப்ப மத்தியில் கூத்தாட்டம்.., மாநிலத்தில தனியாட்டம் எண்டு அடிக்கடி சொல்லி படம் காட்டாம உடப்போறாரு போல.**

**அந்த மனிசன் மட்டும் எந்த ஆட்சி வந்தாலும் அமைச்சுப்பதவி மட்டுமே அவருக்கு கனவு என்ன நான் சொன்னது மெய்தான் எலுவா?**

# சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் நசீருக்கு சேவைநலன் பாராட்டு நிகழ்வு



(கல்முனை நிருபர்)

கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பணியிலிருந்து ஓய்வுபெற்றுச்செல்லும் எம்.எல்.நசீருக்கு சேவைநலன் பாராட்டு நிகழ்வு கல்முனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

சமுர்த்தி தலைமை பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹின் நெறிப்படுத்தலில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஏற்பாட்டில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மன்றத் தலைவர் என்.எம்.நௌசாத் தலைமையில் கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (27) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்ராஸ், விசேட அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, அதிதிகளாக சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# FIFA WORLD CUP - 2022

## இறுதி நேரத்தில் தோல்வியிலிருந்து தப்பிய ஜேர்மனி
### இது நடந்தால் மாத்திரமே நொக் அவுட் சுற்று வாய்ப்பு



குழு 'ஈ' பிரிவில் இடம்பெற்றுள்ள ஸ்பெயின் - ஜேர்மனி அணிகளுக்கிடையிலான, ஜேர்மனிக்கு மிக முக்கியமான ஆட்டத்தில் இறுதி நேரத்தில் அடித்த கோல் மூலம் ஜேர்மனி தோல்வியில் இருந்து தப்பியது. ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்க எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன. பின்னர் பரபரப்பாக தொடங்கிய இரண்டாவது பாதியின் 62ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் அல்வாரோ மொராடா தனது அணிக்கான முதல் கோலை அடித்து அசத்தினார்.

இதனால் ஆட்டம் ஸ்பெயின் அணிக்கு சாதகமாகி இருந்தது. இந்த சூழலில் ஸ்பெயின் அணிக்கு பதிலடியாக ஆட்டத்தின் 83ஆவது நிமிடத்தில் ஜெர்மனி வீரர் நிக்லாஸ் புல்க்ரக் கோல் அடித்து அசத்தினார்.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் மேற்கொண்டு கோல் ஏதும் அடிக்கவில்லை. இதன்மூலம் ஆட்டம் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது.

இதன் முடிவில் புள்ளிப்பட்டியலில் ஸ்பெயின் நான்கு புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. தற்போது ஸ்பெயினுக்கு ஜப்பானுடனான இறுதி ஆட்டத்தில் அடுத்த சுற்றுக்கு முன்னேறுவதற்கு சமநிலை மட்டுமே தேவைப்படுகிறது. ஸ்பெயின் அணி வெற்றி பெற்றால் நொக் அவுட் சுற்றில் முதலிடத்தைப் பிடிக்கும். ஜப்பானுக்கு எதிரான தொடக்க ஆட்டத்தில் 2-1 என்ற கணக்கில் தோல்வியடைந்த ஜேர்மனி, ஒரு புள்ளியுடன் கடைசி இடத்தில் உள்ளது.

ஜேர்மனி கோஸ்டா ரிகாவிற்கு எதிராக வெற்றி பெற வேண்டும் என்பதுடன், அதன் நம்பிக்கை ஜப்பான் தோல்வியை சார்ந்தது. ஜப்பான் சமநிலை செய்தால், கோல் வித்தியாசத்தில் அணிகளின் பட்டியல் கணக்கிடப்படும்



## ஜப்பானை வீழ்த்தி உயிர்பெற்ற கோஸ்டா ரிகா

நேற்று முன்தினம் நடைபெற்ற குழு 'ஈ' க்கான முதல் ஆட்டத்தில் ஜப்பான் அணியை வீழ்த்தி, கோஸ்டா ரிகா அணி முதல் வெற்றியை பதிவு செய்ததுடன் நொக் அவுட் சுற்றுக்கான வாய்ப்பைத் தக்கவைத்தது.

கோஸ்டா ரிகா அணி, தனது முதல் போட்டியில் ஸ்பெயின் அணியிடம் படுதோல்வியை சந்தித்தது. இதனால், இரண்டாவது லீக் போட்டியில் ஜப்பான் அணிக்கு எதிராக வாழ்வா, சாவா என்ற நிலையில் கோஸ்டா ரிகா களம் கண்டது. அகமட் பின் அலி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில், தொடக்கம் முதலே இரு அணிகளும் சமபலத்துடன் ஆடியதால் அனல் பறந்தது.

இருப்பினும், 81ஆவது நிமிடத்தில் ஜப்பான் தடுப்பு ஆட்டக்காரர்கள் செய்த சிறு தவறை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்ட கோஸ்டா ரிகா வீரர் கீஷர் ஃபுல்லர் மிரட்டலான கோல் ஒன்றை அடித்து ரசிகர்களை வியப்பில் ஆழ்த்தினார். கடைசி வரை போராடியும் ஜப்பான் அணியால் பதிலடி கொடுக்க முடியாததால் கோஸ்டா ரிகா 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.



ஜப்பான் முதல் ஆட்டத்தில் ஜேர்மனியை வீழ்த்தியதால் இந்த தோல்வி அந்த அணிக்கு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. கோல் வித்தியாசம் வெறும் பூச்சியமாகவே காணப்படுவதால் அது ஜப்பானுக்கு சாதகமாக அமைந்திருக்கிறது.

## 36 ஆண்டுகளின் பின் உலகக்கிண்ணம் வந்த கனடா வெளியேறியது



குரோஷியா - கனடா அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் கலிபா சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் 4-1 என்ற கோல் கணக்கில் குரோஷிய அணி கனடாவை வீழ்த்தியது. இதன் மூலம் அடுத்தடுத்து இரு ஆட்டங்களில் தோல்வியடைந்த கனடா அணி, கட்டாருக்கு அடுத்ததாக நொக் அவுட் சுற்றுக்கு செல்லும் வாய்ப்பை இழந்தது.

இந்த ஆட்டம் ஆரம்பித்த இரண்டாவது நிமிடத்தில் கனடாவுக்காக அல்ஃபோன்சோ டேவிஸ் முதல் கோலை அடித்து கனடாவுக்கு உற்சாகமளித்தார். நடப்பு உலகக்கிண்ணத் தொடரில் அதிவேக கோலாக (ஆட்டம் தொடங்கி 67 வினாடிகளில்) பதிவானது. 36 ஆண்டுகளுக்குப் பிறகு உலகக்கிண்ணத்தில் பங்கேற்றுள்ள கனடா, போட்டி வரலாற்றில் அடித்திருக்கும் முதல் கோல் இதுவாகும்.

மறுபுறம், கடந்த 2018 உலகக்கிண்ணத்தில் இரண்டாமிடத்தை பிடித்த குரோஷியா, இந்த ஆட்டத்தில் முதலில் சற்றுப் பின்தங்கியது போல் தெரிந்தாலும், பின்னர் கோல் மழை பொழிந்து வென்றது. ஆண்ட்ரே கிரமா ரிக் (36, 70), மார்கோ லிவாஜா (44), லோவ்ரோ மேஜர் (90 +04) ஆகியோர் கோலடித்தனர்.

## 24 வருடங்களின் பின் உணர்வுபூர்வமான வெற்றியைப் பதிவுசெய்த மொரோக்கோ

அல்-துமாமா மைதானத்தில் நேற்று முன்தினம் குரூப் 'எஃப்' பிரிவில் இடம்பெற்றுள்ள பெல்ஜியம் - மொரோக்கோ அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் மொரோக்கோ அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி பீபா உலகக்கிண்ண அரங்கில் 24 வருடங்களின் பின்னர் முதல் வெற்றியை ருசித்தது.

பெல்ஜியம் ஏற்கனவே கனடாவுடன் நடந்த போட்டியில் 1-0 என வெற்றி பெற்றிருந்தது. மறுபுறம் மொரோக்கோ அணி குரோஷியாவுடன் சமநிலை செய்திருந்தது. பெல்ஜியம் அணியுடனான குறித்த ஆட்டத்தில் மொரோக்கோ கிடைத்த சின்ன சின்ன வாய்ப்புகளையும் அதிரடியாக பயன்படுத்தியது. நல்ல வேகத்துடன் ஆட்டம் அமைந்திருந்தது. இதற்கு பலனாக இரண்டாவது பாதியில் கோல் மழை பொழியத் தொடங்கியது. 73 மற்றும் 92ஆவது நிமிடங்களில் முறையே ரோமன் சயிஸ், ஸகாரியா அபவுக்லால் ஆகியோர் கோல் அடித்து அசத்தினர்.

பெல்ஜியத்தின் ஜாம்பவனாகத் திகழும் டி புரூனே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. உபாதையால் அவதிப்பட்டு வந்த லுகாகு விளையாடமாட்டார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், 81ஆவது நிமிடத்தில் மாற்று வீரராக உள்ளே வந்தார். அவரிடம் பந்து பெரிதாக செல்லவே இல்லை. இதனால் லுகாகுவால் ஆட்டத்தில் திருப்புமுனையைக் கொண்டு வர முடியவில்லை. இறுதியில் 2-0 என்ற கோல்கணக்கில் மொரோக்கோ வெற்றி பெற்றது.



### இன்றைய போட்டிகள்

| | |
|---|---|
| ஈக்வடோர் VS செனகல் (குழு A) | இரவு 8.30 |
| கட்டார் VS நெதர்லாந்து (குழு A) | இரவு 8.30 |
| ஈரான் VS அமெரிக்கா (குழு B) | நள்ளிரவு 12.30 |
| இங்கிலாந்து VS வேல்ஸ் (குழு B) | நள்ளிரவு 12.30 |

FIFA WORLD CUP Qatar2022

## மொரோக்கோ வென்றதால் பெல்ஜியம் - நெதர்லாந்தில் கலவரம்

(ரமணி)

கட்டாரில் நடைபெறும் உலகக்கிண்ணப் போட்டியில் மொரோக்கோவை எதிர்த்து விளையாடிய பெல்ஜியம் 2-0 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்ததால் பெல்ஜிய தலைநகர் பிரஸ்ஸல்ஸின் மையப் பகுயில் கலவரம் வெடித்தது. நேரலையில் போட்டியைப் பார்த்த ரசிகர்களின் கலவரத்தை கட்டுப்படுத்த பொலிஸார் நீர் பீரங்கிகளையும், கண்ணீர்ப் புகை குண்டுகளையும் பயன்படுத்தினர்.

கலகக்காரர்கள் செங்கற்களால் கார்களைத் தாக்கி தீ வைத்தனர். இதனைத்தொடர்ந்து சுரங்கப்பாதையையும், டிராம் போக்குவரத்தையும் பொலிஸார் தடை செய்தனர். மொரோக்கோவின் வெற்றி ரசிகர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பல பெல்ஜிய நகரங்களில் மொரோக்கோ குடியேற்றவாசிகள் வெற்றியை உற்சாகமாகக் கொண்டாடினர்.

இதேவேளை அண்டை நாடான நெதர்லாந்தில் உள்ள துறைமுக நகரமான ரோட்டர்டாமிலும் வன்முறை வெடித்ததாகவும், 500 ரசிகர்கள் அடங்கிய குழுவைக் கலைக்க முயற்சித்த பொலிஸார் மீது அவர்கள் பட்டாசுகள் மற்றும் கண்ணாடிகளை வீசித் தாக்கியதாகவும், தலைநகர் ஆம்ஸ்டர்டாம் மற்றும் தி ஹேக்கில் அமைதியின்மை நிலவியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



## கொரோனா பிடிக்குள் சீனா
# நீடிக்கும் ஊரடங்கு - அதிருப்தியில் மக்கள்; ஜனாதிபதிக்கு எதிராக கொந்தளிப்பு



'ஜின்பிங் பதவி விலகு' 'கம்யூனிஸ்ட் கட்சி வெளியேறு'

சீனாவில் கொரோனா தொற்றுப் பரவல் மீண்டும் வேகமெடுத்துள்ள நிலையில், அங்கு கடுமையான ஊரடங்கு கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், கட்டுப்பாடுகளை திரும்பப் பெறக்கோரி, சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் மற்றும் அந்நாட்டின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக நாடு முழுவதும் மக்கள் போராட்டம் தீவிரமடைந்துள்ளது. முக்கிய நகரங்கள், பல்கலைக்கழகங்களில் போராட்டங்கள் வெடித்துள்ளன.

**பி.பி.சி. ஊடகவியலாளர் மீது தாக்குதல்**

இதேவேளை, போராட்ட களத்தில் செய்தி சேக ரித்துக் கொண்டிருந்த லண்டனை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் பி.பி.சி. செய்தியாளர் தாக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவத்திற்காக சீன அரசு மன்னிப்பு கேட்க வேண்டும் என அந்த செய்தி நிறுவனம் கோரியுள்ளது.

இது தொடர்பாக வெளியான வீடியோ ஒன்றில் செய்தியாளரை சில பொலிஸார் சுற்றிவளைத்து அவர் கைகளுக்கு விலங்கிட்டுத் தாக்குகின்றனர். தாக்குதலுக்குள்ளான நபர் பி.பி.சி. செய்தியாளர் என்றும் அவர் தங்கள் நிறுவனத்தைச் சேர்ந்தவர் என்றும் பி.பி.சி. அடையாளப்படுத்தியுள்ளது.

சீனாவின் வூஹான் நகரில் கடந்த 2019ஆம் ஆண்டு டிசம்பர் இறுதிப்பகுதியில் கண்டறியப்பட்ட கொவிட்-19 வைரஸ் உலகம் முழுவதுள்ள 200இற்கும் மேற்பட்ட நாடுகளில் பரவி பல இலட்சக்கணக்காண உயிர்களைக் காவுகொண்டது.

இந்நிலையில், உலக நாடுகள் ஒன்றிணைந்து கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசிகளைக் கண்டுபிடித்த நிலையில், இரண்டு வருடங்களாக உலகை உலுக்கிய கொரோனா தொற்று கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இதனால் பொருளாதார ரீதியில் வீழ்ச்சி கண்ட பல நாடுகள் மெல்லென மீண்டெழ ஆரம்பித்துள்ளன.

இந்நிலையில், தற்போது சீனாவில் மீண்டும் கொரோனா தொற்றுப் பரவல் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. நாளொன்றுக்கு 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தொற்றுக்குள்ளாவதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

**மாதக் கணக்கில் நீடிக்கும் ஊரடங்கு**

கொரோனா பாதிப்பை பூஜ்ஜியமாக்கும் நோக்கில் மாதக்கணக்கில் ஊரடங்கு, நாட்கணக்கில் தனிமைப்படுத்துதல் ஆகியவை அமுல்படுத்தப்பட்டுள்ளன. இதனால் மக்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர்.

**உருஊச்சியில் 10 பேர் பலி**

இந்நிலையில், உருஊச்சி நகரில், கொரோனா நோயாளிகள் இருந்ததால் ஒரு சில வாயில் கதவுகள் மட்டுமே திறந்துவைக்கப்பட்டிருந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில், 10 பேர் வெளியேற முடியாமல் உள்ளேயே சிக்கி உயி ரிழந்த சம்பவம் அரசுக்கு எதிரான கொந்தளிப்பை மேலும் அதிகரித்து போராட்டங்களுக்கு வழிவகுத்துள்ளது.

**மக்கள் போராட்டம்**

ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியால் கடுமையான தணிக்கை கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதால் பலர் காலி பதாகைகளுடன் போராட்டத்தில் பங்கேற்றனர்.

இந்த விவகாரத்தால் உரும்கியில் தொடங்கிய மக்கள் போராட்டம் நாடு முழுவதும் பரவியுள்ளது.

பீஜிங், ஷாங்காய், உரும்கி, நான்ஜிங், குவாங்ஜோ உள்ளிட்ட 12இற்கும் மேற்பட்ட நகரங்களில் நடந்த போராட்டங்களில் நூற்றுக்கணக்கான மக்கள் பங்கேற்றுள்ளனர்.

**'ஜின்பிங் பதவி விலகு'**

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஜனாதிபதி ஜின்பிங் மற்றும் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக கண்டன கோஷங்களை முழங்கியுள்ளனர். 'ஜின்பிங் பதவி விலகு', 'கம்யூனிஸ்ட் கட்சி வெளியேறு' என கோஷமிட்டுள்ளனர்.


அதிபருக்கு எதிராக இத்தகைய எதிர்ப்பு கோஷங்கள் இதுவரை சீனாவில் ஒலித்ததில்லை. ஆனால், தற்போது கொரோனா விவகாரம் சீன மக்கள் மத்தியில் அரசுக்கு எதிரான மனநிலையை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவின் வாழ்நாள் ஜனாதிபதியாகவுள்ள ஸி ஜின்பிங், ஒட்டுமொத்த அதிகாரத்தையும் தனது கைப்பிடியில் வைத்துள்ளார். ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியைத் தவிர எந்த எதிர்க்கட்சியும் அந்நாட்டில் இல்லை. இதனால் எந்த எதிர்ப்பும் இல்லாததால், கொரோனா விடயத்தில் ஜின்பிங் அரசு மிகக் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து சீன மக்களை வாட்டி வதைத்து வருகிறது.

கடந்த சில நாட்களாக சீனாவில் மீண்டும் கொரோனா தொற்று திடீரென அதிகரித்துள்ளது. இந்நிலையில், சில மாகாணங்களில் ஊரடங்கு கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

## உலக செய்திகள்

## ஐ.நா. தலைமையகத்தில் மகாத்மா காந்தியின் சிலை
### டிச.14இல் திறப்பு



ஐ.நா. தலைமையகத்தில் முதன்முறையாக டிசம்பர் 14ஆம் திகதி மகாத்மா காந்தியின் சிலை திறக்கப்படவுள்ளது.

ஐ.நா. பாதுகாப்பு சபையின் தலைமைப் பொறுப்பை, அந்த சபையின் உறுப்பு நாடுகள் மாதந்தோறும் சுழற்சிமுறையில் ஏற்கும். இதன் தொடர்ச்சியாக டிசம்பர் மாதத் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்கவுள்ளது. இதையொட்டி, அடுத்த மாதம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள ஐ.நா. தலைமையகத்துக்கு இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் செல்லவுள்ளார். அப்போது அங்கு டிசம்பர் 14ஆம் திகதி மகாத்மா காந்தியின் மார்பளவு சிலை திறக்கப்படவுள்ளது.

## 50 கோடி வட்ஸ் ஆப் தரவுகள் விற்பனை
### அதிர்ச்சியில் பயனர்கள்



50 கோடி பயனர்களின் வட்ஸ் ஆப் தரவுகள் ஹேக்கர்களிடம் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக அதிர்ச்சிகர தகவல் வெளியாகியுள்ளது.

உலகம் முழுவதும் அனைவரின் விருப்பமான உரையாடல் வசதியை வழங்கும் தளமாக வட்ஸ் ஆப் செயலி உள்ளது. இந்த செயலியில் பயனர்களின் தரவுகளை பாதுகாப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதே சமயம் அவ்வப்போது பயனர் பாதுகாப்பின்மை தொடர்பான சிக்கல்களையும் இந்த செயலி சந்தித்துள்ளது.

இந்நிலையில், வட்ஸ் ஆப் பயன்படுத்தும் 50 கோடி பயனர்களின் தரவுகள் ஹேக்கர்கள் எனப்படும் இணையக் குற்றம் செய்பவர்களுக்கு விற்பனைக்கு சென்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

'சைபர் நியூஸ்' எனப்படும் அறிக்கையில் வெளிவந்த இந்த தகவலின்படி உலகம் முழுவதும் பயன்பாட்டிலுள்ள 48.7 கோடி வட்ஸ் ஆப் பயனாளர்களின் தொலைபேசி இலக்கம் உள்ளிட்ட உரையாடல் தரவுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவல்கள் வட்ஸ் ஆப் செயலியின் தரவு மையத்திலிருந்து திருடப்படவில்லை எனத் தெரிவித்துள்ள இந்த அறிக்கையானது பல்வேறு தளங்களில் பதிவுசெய்யப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தொலைபேசி இலக்கங்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

இதில் அமெரிக்காவின் 3.2 கோடி பயனர்கள், பிரிட்டனின் 1.1 கோடி பயனர்கள், ரஷ்யாவின் ஒரு கோடி பயனர்கள், இத்தாலியின் 3.5 கோடி பயனர்கள், சவூதியின் 2.9 கோடி பயனர்கள் மற்றும் இந்தியாவின் 60 இலட்சம் பயனர்களின் தரவுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7